# தமிழ்

# ழகரம்

## இரண்டாம் பருவம்

## விடைகள்

# பாடம் – 17

## 17.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 4)

1. பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் அகழாய்வு நடைபெற்றது.

2. ஆதிச்சநல்லூரில் செம்பாலும் இரும்பாலும் செய்யப்பட்ட மோதிரங்கள், தந்தத்தில் செய்யப்பட்ட மணிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், தங்கத்தாலான பட்டங்கள் முதலிய அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டன.

3. பொருநல், பொருந்தம், தண்பொருநை, தண்பொருந்தம், தாம்பபண்ணி, தாமிரபரணி என்பன பொருநை ஆற்றுக்கு வழங்கும் வேறு பெயர்கள் ஆகும்.

4. சிவகளையில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு, கறுப்பு – சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள், உமிநீக்கப்பட்ட நெல் முதலியன கிடைத்தன.

5. கொற்கை அகழாய்வில் சங்கு வளையல்கள், வெள்ளி முத்திரைக்காசுகள், மெருகூட்டப்பட்ட கருமை நிறப்பானைகள், சதுரவடிவிலான செங்கல் கட்டுமானம் முதலியன கிடைத்தன.

6. மனிதன் வாழ்ந்த காலத்தையும், தொன்மை, நாகரிகம், பண்பாட்டுக் கூறுகள் முதலியவற்றை அறிந்து கொள்வதே அகழாய்வு செய்வதற்கான நோக்கங்கள் ஆகும்.

### ஆ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 5)

| | | | |
|---|---|---|---|
| 1. | வடக்கு + கரை | = | வடகரை |
| 2. | கருமை + நிறம் | = | கருநிறம் |
| 3. | தொழில் + நுட்பம் | = | தொழில்நுட்பம் |
| 4. | பானை + ஓடு | = | பானையோடு |
| 5. | முதல் + கட்டம் | = | முதற்கட்டம் |

### இ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 5)

| | | |
|---|---|---|
| 1. அகழாய்வு | = | அகழ் + ஆய்வு |
| 2. மட்பாண்டங்கள் | = | மண் + பாண்டங்கள் |
| 3. வண்ணக்கலயம் | = | வண்ணம் + கலயம் |
| 4. ஆற்றங்கரை | = | ஆறு + கரை |
| 5. பழக்கவழக்கம் | = | பழக்கம் + வழக்கம் |

### ஈ) பொருத்துக. (பக்கம் எண்: 5)

| | | |
|---|---|---|
| 1. சிவகளை | – | உமிநீக்கப்பட்ட நெல் |
| 2. ஆதிச்சநல்லூர் | – | வேட்டைக் கருவிகள் |
| 3. கொற்கை | – | சங்கு வளையல்கள் |

### உ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 5)

1. இ) வடக்கு
2. ஆ) ஆதிச்சநல்லூர்
3. ஆ) சிவகளை

### ஊ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 5)

1. தாமிரபரணி
2. ஆதிச்சநல்லூர்
3. அமெரிக்கா
4. கொற்கை
5. பொருநை

## 17.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சத்தை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக மாற்றுக. (பக்கம் எண்: 9)

1. மேயாப் பசு
2. வாடா மலர்
3. அணையா விளக்கு

**ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியிலிருந்து ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சச் சொற்களை எடுத்து எழுதுக. (பக்கம் எண் : 9)**

1. புகாத பூஞ்சோலை
2. வாடாத மலர்கள்
3. வற்றாத குளம்
4. மாறாத செடிகொடிகளை

**இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியிலிருந்து ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சச் சொற்களை எடுத்து எழுதுக. (பக்கம் எண்: 9)**

1. இல்லாச் சிறப்புகளே
2. கூறாக் கருத்துகளை
3. தீராக் காதல்
4. கூடா நட்பு
5. கூடா ஒழுக்கம்

**ஈ) கீழ்க்காணும் தொடர்களைப் படித்து, அட்டவணையை நிரப்புக. (பக்கம் எண்: 10)**

| உடன்பாட்டு பெயரெச்சம் | ஈறு கெடாத எதிர்மறைப் பெயரெச்சம் | ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
|---|---|---|
| பாடிய புலவர் | வற்றாத வளம் | புனையா ஓவியம் |
| தேடிய செல்வமே | காணாத தாய் | இல்லா நாடு |

**உ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் இடம் பெற்றுள்ள குறிப்புப் பெயரெச்சங்களை எடுத்தெழுதுக. (பக்கம் எண்: 10)**

1. பெரிய பள்ளி
2. சிறிய தோட்டமும்
3. அழகிய மலர்கள்
4. இனிய காட்சியைக்

**ஊ) கீழே தரப்பட்டுள்ள குறிப்புச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 10)**

1. அழகிய – அழகிய வானம்
2. இனிய – இனிய குரல்
3. சிறிய – சிறிய வீடு
4. பெரிய – பெரிய பையன்
5. புதிய – புதிய ஆத்திசூடி

## 17.4 மொழியோடு விளையாடுவோம்.

**குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக. (பக்கம் எண்: 11)**

1. மூன்றெழுத்துச் சொல் – கவிதை
2. நாலெழுத்துச் சொல் – நெய்தல்
3. ஐந்தெழுத்துச் சொல் – பாரதியார்

## கருத்து விளக்கப்படம்

**வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 12)**

1. 15.05.2023
2. கலைவாணர் அரங்கம்,
3. பாடல் நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி
4. மே 13
5. குடும்பங்களும் புதிய தொழில் நுட்பங்களும்

## 17.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 13)**

1. திருவூர்

2. மருத்துவர் அவரிடம் மருத்துவம் பார்த்துக் கொள்பவர்கள் வசதி இல்லாதவர்களாக இருந்தால் பணம் எதுவும் கேட்கமாட்டார். ஆகவே ஊரில் உள்ளோர் மருத்துவர் மீது மிகவும் மதிப்பு வைத்திருந்தனர்.

3. இளைஞன், "ஐயா, என் மனைவிக்கு உடல் நலமில்லை. உங்களை அழைத்துப் போக வண்டி கூட இருக்கிறது. எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. உடனே வந்து மருத்துவம் செய்யுங்கள்" என்று மருத்துவரிடம் கூறினான்.

4. முதியவர் மிகவும் ஏழ்மையானவர். அவரிடம் பணம் இல்லை. அதனால் மருத்துவர் முதியவருக்கு உதவ நினைத்தார்.

5. மனித நேயம்

## 17.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 15)**

1. **பண்பாடு**
   **பண்பாடு** என்பது சமுதாயம் வாழும் முறையை விளக்குவது ஆகும்.

2. **அகழாய்வு**
   உலகின் பல பகுதிகளில் **அகழாய்வு** நடைபெறுகிறது.

3. **அருங்காட்சியகம்**
   தொல் பொருள்களை **அருங்காட்சியக**த்தில் காணலாம்.

## 17.8 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 15)

தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பொதிகை மலைகளில் இருந்து உருவாகி, தமிழ்நாட்டின் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாகப் பாய்கிறது.

## 17.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமாகக் கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்குக. (பக்கம் எண்: 16)**

1. நூலகத்தில் எண்ணற்ற பிரிவுகளில் நூல்கள் உள்ளன.
2. நூலகத்தில் பேசுவதற்கு அனுமதி இல்லை.
3. நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய வேண்டும்.
4. நூலகத்தின் விற்பனைக் கூடத்தில் நூல்கள் விற்பனை செய்யப்படும்.
5. மாணவர்களுக்குச் சலுகை விலையில் நூல்கள் விற்கப்படுகின்றன.

## 17.11 உயர்நிலைத் திறன்

**கீழ்க்காணும் குறிப்புகளை விரிவாக்கிச் செய்தித்தாளில் வெளியிடுவதற்கு ஏற்ப, செய்தி உருவாக்குக.**

**கலை, பண்பாட்டு நிகழ்ச்சி**

பள்ளியில் இரண்டு நாள் கலை, பண்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு, பன்னாட்டுப் பண்பாட்டை விளக்கும் காணொலிகள் ஒளிபரப்பப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் வாழ்த்துரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# பாடம் – 18

## 18.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 21)

1. பொருள் உள்ளவர்கள் பொருள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது கொடை ஆகும்.
2. "செல்வத்தின் பயனே ஈதல்" என்பதன் பொருள் பொருளுடையவர்கள் பொருள் இல்லாதவருக்குக் கொடுப்பதே அவர்கள் வைத்திருக்கும் செல்வத்தின் பயன் ஆகும்.
3. பாரி
4. பேகன், குளிரால் நடுங்கிய மயிலுக்கு தம் உடல் மேல் போர்த்தியிருந்த போர்வையை எடுத்துப் போர்த்தினார். இதன் மூலம் ஐந்தறிவு உயிர்களிடத்திலும் அவர் கொண்டுள்ள இரக்கப்பண்பு வெளிப்படுகிறது.
5. வில்லினைப் பயன்படுத்திப் பாடப்படும் பாட்டு வில்லுப்பாட்டு எனப்படும்.

### ஆ) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. (பக்கம் எண்: 21)

1. வில்லுப்பாட்டு
2. கொடுத்தல்
3. முல்லைக்கொடி
4. பேகன்

### இ) சேர்த்து எழுதுக . (பக்கம் எண்: 21)

| | | | |
|---|---|---|---|
| 1. | கொடை + சிறப்பு | = | கொடைச்சிறப்பு |
| 2. | புறம் + நானூறு | = | புறநானூறு |
| 3. | உயிர் + இரக்கம் | = | உயிரிரக்கம் |
| 4. | சங்கம் + இலக்கியம் | = | சங்க இலக்கியம் |
| 5. | பல + ஆண்டு | = | பல்லாண்டு |

### ஈ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 21)

| | | | |
|---|---|---|---|
| 1. | வில்லுப்பாட்டு | = | வில்லு + பாட்டு |
| 2. | வந்தருள்வாய் | = | வந்து + அருள்வாய் |
| 3. | மனநிறைவு | = | மனம் + நிறைவு |
| 4. | இரக்கக்குணம் | = | இரக்கம் + குணம் |
| 5. | ஐந்தறிவு | = | ஐந்து + அறிவு |

### உ) பொருத்துக. (பக்கம் எண்: 21)

| | பேச்சுவழக்குச் சொற்கள் | – | எழுத்து வழக்குச் சொற்கள் |
|---|---|---|---|
| 1. | இன்னைக்கு | – | இன்றைக்கு |
| 2. | சொல்றேன் | – | சொல்கிறேன் |
| 3. | சொல்லுது | – | சொல்கிறது |
| 4. | போறோம் | – | போகிறோம் |
| 5. | இருக்கணும் | – | இருக்கவேண்டும் |

## 18.3 தெரிந்துகொள்வோம்

### பயிற்சிகள்

### அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஈறுகெடாத எதிர்மறை வினையெச்சத்தை ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாக மாற்றுக. (பக்கம் எண்: 24)

1. வரையாமல் இருந்தான்
2. ஓடாமல் இருந்தான்
3. ஆடாமல் நின்றாள்
4. பெறாமல் நின்றார்
5. நனையாமல் நின்றாள்

### ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்தை ஈறுகெடாத எதிர்மறை வினையெச்சமாக மாற்றுக. (பக்கம் எண்: 25)

1. உழாது நின்றான்
2. வாராது நின்றாள்
3. அஞ்சாது நின்றான்
4. இறங்காது நின்றான்

## 18.4 மொழியோடு விளையாடுவோம்.

**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக. (பக்கம் எண்: 26)**

| **இடமிருந்து வலம்** | **வலமிருந்து இடம்** |
|---|---|
| 1. பாரி<br>2. காரி<br>7. வலை<br>8. கொடை | 5. சுவை<br>9. பார் |
| **மேலிருந்து கீழ்** | **கீழிருந்து மேல்** |
| 1. பாட்டு<br>3. ஔவை<br>6. விடை | 4. ஓரி<br>9. பாலை |

## 18.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 27)**

1. பணக்காரர் வெளியூருக்குச் சென்றார்.
2. பணக்காரர் , ஊருக்குப் புறப்பட ஆயத்தமானார்.
3. காவலர்கள், பணக்காரரைப் பார்த்து, 'ஐயா, இந்தக் காதணிகள் உங்களுடையதா எனப் பாருங்கள்' என்று கேட்டனர்.
4. காவலர்களிடம் பணக்காரர், 'காதணிகள் என்னுடையவை தாம். அவற்றை நான் அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டேன்' என்றார்.
5. காதணிகளைத் திருடியவரைத் தண்டிக்காமல் மன்னித்து பொருள் ஈட்ட வழி நடத்தி அவரைத் திருத்தினார்.

## 18.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 29)**

1. **கொடை**

   பொருள் உடையவர்கள் பொருள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது **கொடை** ஆகும்.

2. **புகழ்**

   **புகழ்** பெற்ற மூவேந்தர்கள் சேரர், சோழர், பாண்டியர் ஆவர்.

3. **செல்வம்**

**கல்விச்செல்வமே அழியாதச் செல்வம் ஆகும்.**

4. **உழைப்பு**

**உழைப்பு உயர்வைத் தரும்.**

## 18.9 மொழிபெயர்ப்போம் (பக்கம் எண்: 29)

King Pari was excellent in valor; full of virtue; and above all, unparalleled in generosity. He would give food, clothing, and goods to those who sought him; he was content to give an entire village to the poet.

## 18.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் படக்காட்சிக்குப் பொருத்தமாக உரையாடல் உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| மன்னன் | : | ஔவையே! இதை வாங்கிக் கொள்ளுங்கள். |
| ஔவை | : | மன்னா! இது என்ன? |
| மன்னன் | : | ஔவையே! இது ஓர் அரிய வகை நெல்லிக்கனி. |
| ஔவை | : | இதை எனக்கு எதற்கு கொடுக்கிறீர்கள்? |
| மன்னன் | : | இதை உண்டால் நீண்ட நாள் வாழலாம். |
| ஔவை | : | அப்படியென்றால் தாங்களே உண்ணலாமே. |
| மன்னன் | : | நீங்கள் உண்டால் தமிழ் வளரும். அதனால் தான் உங்களுக்குத் தந்தேன். |
| ஔவை | : | நன்றி மன்னா! உன் புகழ் ஓங்குக! |

# பாடம் – 19

## 19.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 34)

1. கி.பி. 2147

2. எந்திர மனிதர்கள்

3. நுண்ணுயிரி பொறியியல் துறையின் ஆராய்ச்சி மருத்துவர், மார்ஸ் தாவர ஆய்வு மையத்தின் பழுதடைந்த பயோ கேப்சூலைச் சரி செய்து கொண்டிருக்கும் போது ஏற்பட்ட ஒளிப்பிழம்பில் உடல் பற்றி எரிந்து இறந்து விட்டார். அதனால் அவர் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டிருந்தார்.

4. எமன்

5. பாதரசம், ஆராய்ச்சி மருத்துவரின் கடந்த வாழ்க்கைக் குறிப்பை நம் கிரக மொழிக்கு மாற்ற முடியவில்லை. பூமியில் உள்ளவன், அறிவியலில் நமக்கு மேல் போய் விட்டான். இவனை இப்போது தண்டிக்கமுடியாது. அதனால் திரும்ப அனுப்பிவிடு எனக் கூறியது.

6. எதிர்காலத்தில் எந்திர மனிதர்களின் ஆதிக்கம் மிகுந்து இருக்கும். கணினியின் மூலமாக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி துறையில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படும். இத்தகைய எந்திர உலகத்தில் மனிதன் எந்திரமாகவே வாழ்ந்து கொண்டிருப்பான்.

### ஆ) கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 34)

1. சரி
2. சரி
3. தவறு
4. தவறு

### இ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 34)

1. உடை + அணிந்து – உடையணிந்து
2. மனம் + திரை – மனத்திரை
3. ஒளி + கீற்று – ஒளிக்கீற்று
4. மின் + அணு – மின்னணு
5. நேற்று + இரவு – நேற்றிரவு

### ஈ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 34)

1. வரவேற்பறை – வரவேற்பு + அறை
2. ஒளிக்கதிர் – ஒளி + கதிர்
3. பிணைத்திருந்தது – பிணைத்து + இருந்தது
4. நுண்ணுயிரி – நுண் + உயிரி
5. பதிவிறக்கம் – பதிவு + இறக்கம்

## 19.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) தெரிநிலை வினைமுற்றுச் சொற்களை எடுத்தெழுதுக. (பக்கம் எண்: 36)

1. பாடினாள்
2. எழுதுகிறான்
3. ஆடுவார்கள்
4. படித்தேன்
5. பறக்கிறது
6. மேயும்

### ஆ) கீழ்க்காணும் தொடர்களிலிருந்து திணை, பால், எண், காலம் ஆகியவற்றை எடுத்து எழுதுக. (பக்கம் எண்: 36)

| திணை | | பால் | எண் | காலம் |
|---|---|---|---|---|
| 1. | உயர்திணை | பலர்பால் | பன்மை | நிகழ்காலம் |
| 2. | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | இறந்தகாலம் |

இ) கீழ்க்காணும் தொடர்களைச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்து எழுதுக.
(பக்கம் எண்: 37)

| செய்பவர் | | கருவி | நிலம் | செயல் | காலம் | செய்பொருள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குயவன் | மண் | வீடு | வனைதல் | இறந்த காலம் | பானை |
| 2. | குயிலி | எழுதுகோல் | வீடு | எழுதுதல் | நிகழ்காலம் | கட்டுரை |

## 19.4 மொழியோடு விளையாடுவோம்

விடுகதையைப் படித்து விடை கண்டறிக. (பக்கம் எண்: 37)

1. அல்லி
2. கிளி
3. மாதுளம்பழம்
4. வெண்டைக்காய்
5. உப்பு

## 19.5 கேட்டல் கருத்தறிதல்

வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 38)

1. இந்தியா
2. இங்கிலாந்து
3. ஜெகதீஸ் சந்திர போஸின் கண்டுபிடிப்பு தாவரத்திற்கும் உயிர் உண்டு என்பதாகும்.
4. விஷம் நிரப்பப்பட்ட ஊசியை எடுத்து தாவரத்தின் மீது செலுத்தினார். இதனால் தாவரம் துடிதுடித்து இறந்தது. இதன் மூலம் தாவரத்திற்கும் உயிர் உண்டு என்பதை மெய்ப்பித்தார்.
5. ஜெகதீஸ் சந்திர போஸ் தாவரத்திற்கும் உயிர் உண்டு என்பதை நிருபிக்கும் சோதனையில் தவறு நேர்ந்ததைக் கண்டுபிடிக்க தம்மையே சோதனைக்கு உட்படுத்திக்கொள்ள தயங்கவில்லை.

## 19.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 40)**

1. **விண்வெளி ஆராய்ச்சி**

   **விண்வெளி ஆராய்ச்சி** மூலம் விண்கோள்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

2. **அகன்ற திரை**

   தற்போது **அகன்ற திரை** கொண்ட தொலைக்காட்சிகள் எல்லோர் வீட்டிலும் இருக்கின்றது.

3. **செயல் திட்டம்**

   நம் நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால் அதற்கு ஒரு **செயல் திட்டம்** உருவாக்க வேண்டும்.

4. **இயற்கை விவசாயம்**

   மண் வளத்தைக் காக்க **இயற்கை விவசாயம்** சிறந்த வழி.

## 19.9 மொழிபெயர்ப்போம் (பக்க எண். 40)

Aquatic plants are plants that live partially or completely submerged in water. Some aquatic plants include lotus, vallisneria, etc. These plants live in seawater or freshwater.

## 19.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் நுண்கதையைப் படித்து அதன் முடிவை மாற்றிக் கூறுக. (பக்க எண். 41)**

நரி, சேவலைப் பார்த்து, "நீ கண்ணை மூடிக் கொண்டு கூவும்பொழுது, மிகவும் இனிமையாக இருக்கும்" என்று கூறியது. சேவல், நரியிடம் புகழ்ச்சி எனக்குப் பிடிக்காது. இருந்தாலும் என்னைப் புகழ்ந்ததற்கு நன்றி என்று கூறி விட்டு, சென்றுவிட்டது. நரி ஏமாந்து போய் விட்டது.

## 19.11 உயர்நிலைத்திறன்

**கீழ்க்காணும் படத்தைப் பார்த்து, விடையளிக்கும் வகையில் வினாக்கள்– விடைகள் உருவாக்குக. (பக்க எண். 41)**

**வினாக்கள்– விடைகள்.**

1. கண்காட்சி எதனைப் பற்றியது?
2. அறிவியல் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. அறிவியல் கண்காட்சி நடைபெறும் நாள் எது?
4. அறிவியல் கண்காட்சியில் யாருடைய கண்டுபிடிப்பு காட்சிப்படுத்தப் படுகின்றது?

# பாடம் – 20

## 20.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 46)

1. கண் வங்கி, இரத்த வங்கி, எலும்பு வங்கி, தோல் வங்கி

2. கண்வங்கி என்பது கண் தானம் மூலம் பெறப்பட்ட கருவிழி, கூம்பல், விழி வெண்படலம், வடு போன்ற கண் திசுக்களும் தானமாகப் பெறப்பட்டு சேமிக்கப்படும் இடம் ஆகும்.

3. 18 வயதிற்கு மேற்பட்ட 50 கிலோ எடை கொண்ட ஆண்களும் பெண்களும் நல்ல உடல்நலத்துடன் இருக்க வேண்டும். இவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை இரத்தத்தைத் தானமாக வழங்கலாம்.

4. உடல் உறுப்புத்தானம் என்பது, ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகளைத் தேவைப்படும் மற்றொருவருக்கு அளிப்பதாகும். இதனால் பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

5. உயிர் காக்கும் வங்கிகள் பற்றியும் உறுப்புத்தானத்தின் தேவைகள் பற்றியும் மாணவர்கள், பெற்றோர்க்கும் உறவினர்க்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் வாயிலாக உயிர்காக்கும் வங்கிகளுக்கு உதவலாம்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 46)

1. அ) 18
2. ஆ) ஆர். டௌன்லி பேடன்
3. இ) ஆகஸ்ட் 13
4. இ) 1944
5. அ) 6

### இ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 46)

| | | |
|---|---|---|
| 1. உடல் + உறுப்பு | = | உடலுறுப்பு |
| 2. ஆண்டில் + இருந்து | = | ஆண்டிலிருந்து |
| 3. மருத்துவம் + உலகம் | = | மருத்துவ உலகம் |
| 4. விழிப்பு + உணர்வு | = | விழிப்புணர்வு |
| 5. மூளை + சாவு | = | மூளைச்சாவு |

**ஈ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 46)**

1. கருவிழி = கருமை + விழி
2. வெண்படலம் = வெண்மை + படலம்
3. கிருமித்தொற்று = கிருமி + தொற்று

## 20.3 மொழிக்கூறு

**பயிற்சிகள்**

**அ) பின்வரும் சொற்களுக்கு இருபொருள் தருக. (பக்கம் எண்: 48)**

1. அ) பலகை (பொருள்) ஆ) பல கை (உறுப்பு)
2. அ) விழாத்தலைவர் (சிறப்புவிருந்தினர்) ஆ) விழாவின் தலைவர்(நாயகர்)
3. அ) செங்கல்பட்டு (ஊர்) ஆ) செங்கல் பட்டு (செங்கல் மேல் பட்டு)
4. அ) தாமரை (பூ) ஆ) தா மரை (தாவுகின்றமான்)
5. அ) அண்டங்காக்கை (பறவை) ஆ) அண்டங்காக்கை (அண்டத்தைக் காப்பது)

**ஆ) பின் வரும் தொடர்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்கம் எண்: 48)**

1. தங்கவீடு
2. நாடு
3. மலைத்தேன்
4. பெருங்காயம்
5. அந்த மான்

## 20.4 மொழியோடு விளையாடுவோம் (பக்கம் எண்: 49)

**கீழ்க்காணும் இருதொடருக்கும் ஒரே சொல் விடையாக வரும். அதனைக் கண்டறிக. (பக்கம் எண்: 49)**

1. தாமரை
2. மாலை
3. பெருங்காயம்
4. வாடை
5. அன்னம்

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 50)

1. இரத்தச்சோகை
2. தாய்மார்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள்
3. 12.03.2023
4. விழிப்புணர்வு முகாம் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படுகிறது.
5. இடம்: அண்ணா பல்கலைக்கழக வளாகம், சென்னை. நேரம்: காலை 9.00 மணி முதல் மதியம் 1 மணி வரை.

## 20.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 53)

1. உணவானது சில நேரங்களில் உணவுக் குழாய்க்குப் போகாமல் காற்றுக் குழாய்க்குள் போய் விடும். இதனால் மூச்சுக்காற்று தடைபடும். இதுவே புரையேறுதல் என்பர்.

2. அவசர அவசரமாகவோ, தண்ணீர் குடிக்காமலோ உண்பதால் விக்கல் ஏற்படுகிறது.

3. தண்ணீர், பழச்சாறு குடித்தால் விக்கல் நின்று விடும். பொதுவாக ஐந்து மணித்துளி மூச்சை ஆழமாக இழுத்து வெளியே விட்டால் விக்கல் நின்று விடும்.

4. புரையேறுதலை தடுக்க நாம் பேசாமல் சாப்பிட வேண்டும்.

5. ஐந்து மணித்துளிகள்

## 20.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 52)

1. **அறுவைச் சிகிச்சை**
   இன்றைய மருத்துவ உலகில் **அறுவைச் சிகிச்சை** எளிதாக நடைபெறுகிறது.

2. **உடல்நலம்**

தினந்தோறும் விளையாட்டுப் பயிற்சி மேற்கொண்டால் **உடல்நலம்** நன்றாக இருக்கும்.

3. **விழிப்புணர்வு**

மக்களிடம் உடல் உறுப்பு தானம் பற்றிய **விழிப்புணர்வு** ஏற்பட வேண்டும்.

## 20.9 மொழிபெயர்ப்போம்

உறுப்பு தானம் என்பது ஒருவரின் ஆரோக்கியமான உறுப்புகள் மற்றும் திசுக்களை இன்னொருவருக்கு மாற்றுவதற்கு எடுப்பது ஆகும். தானம் செய்யும் ஒருவரின் உறுப்புகள் 50 பேரைக் காப்பாற்றவோ அல்லது உதவவோ முடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். நீங்கள் தானம் செய்யக்கூடிய உறுப்புகள்: சிறுநீரகங்கள், இதயம், கல்லீரல், கணையம், குடல், நுரையீரல் போன்ற பலவாகும்.

## 20.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

**கீழ்க்காணும் கதையின் தொடக்கத்தைப் படித்துத் தொடர்ந்து எழுதுக.**

கதையின் தொடர்ச்சி :

அங்கு வந்த மீனா மணிமொழியுடன் அந்த மாணவருக்குத் தேவையான முதலுதவி செய்தாள். பின்னர் அங்கிருக்கும் அவசர மருத்துவ ஊர்தியில் மருத்துவர் செவிலி ஆகியோரை உடனே வரவழைத்து அந்த மாணவனை மருத்துவமனைக்கு அனுப்ப தேவையான அனைத்தை உதவிகளையும் இருவரும் செய்தனர். அவர்கள் இருவரும் விளையாட்டில் மட்டுமல்லாது பிறருக்கு உதவும் குணத்திலும் சிறந்து விளங்கினர்.

## 20.11 உயர்நிலைத்திறன்

**பின்வரும் கடிதத்தில் கோடிட்ட இடத்தை நிரப்பி, முழுமையாக்குக.**
**(பக்க எண்: 54)**

1. குடும்பத்தினரும்
2. கண்காட்சி
3. ஓவியங்கள்
4. திருக்குறள்
5. கற்பனையாற்றல்
6. வலையொளி
7. சிறப்பு நிகழ்வுகள்

# பாடம் – 21

## 21.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 57)

1. மனிதன் பேசும் மொழியில் மொழி கற்றல், திறம்படக் கையாளுதல் ஆகியவற்றை அறிந்து கொண்டு கணினிக்கு அளிக்கும் வழிமுறைகளை ஆராய்வதே இயற்கை மொழி ஆய்வு எனப்படும்.

2. மனிதர்கள் பேசுவது இயற்கை மொழி.

3. கணினியில் பயன்படுத்தும் நிரலாக்க மொழிகளான C, C++, JAVA, Perl, Python போன்றவை செயற்கை மொழிகளாகும்.

4. மனிதனைப் போலவே தானாகப் பேசி எழுதி படிப்பதைத் தானாகச் செய்து முடிக்கின்ற ஒரு கருவியை உருவாக்குவதே இயற்கைமொழி ஆய்வின் நோக்கமாகும்.

5. இரு இயற்கை மொழிகளுக்கிடையே பேச்சையோ நூலையோ கணினி மூலம் மொழிபெயர்ப்பது இயந்திர மொழிபெயர்ப்பு ஆகும்.

6. மொழி கற்பது தற்போது இனிய அனுபவமாக மாறியுள்ளது. மொழிபெயர்ப்பு எளிய வேலையாக மாறியுள்ளது. கற்றல் மென்பொருள்களைப் பயன்படுத்திக் குழந்தைகள் விளையாடிக்கொண்டே ஆர்வத்துடன் மொழியைக் கற்கின்றனர்.

### ஆ) கீழ்க்காணும் வினாக்கள்– விடைகள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்கம் எண்: 58)

1. தவறு
2. சரி
3. சரி
4. சரி
5. தவறு

**இ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 58)**

| | | |
|---|---|---|
| 1. மொழி + ஆய்வு | = | மொழியாய்வு |
| 2. சொல் + அடைவு | = | சொல்லடைவு |
| 3. உள் + ஈடு | = | உள்ளீடு |
| 4. தொடர் + இயல் | = | தொடரியல் |
| 5. தொழில் + நுட்பம் | = | தொழில்நுட்பம் |

**ஈ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 58)**

| | | |
|---|---|---|
| 1. கணினியியல் | = | கணினி + இயல் |
| 2. தொடர்பியல் | = | தொடர்பு + இயல் |
| 3. நிரலாக்கமொழி | = | நிரலாக்கம் + மொழி |
| 4. பகுப்பாய்வு | = | பகுப்பு + ஆய்வு |
| 5. சொற்களஞ்சியம் | = | சொல் + களஞ்சியம் |

**உ) கோடிட்ட இடங்களை நிரப்புக. (பக்க எண்: 58)**

1. இயற்கை மொழி
2. நிரலாக்க மொழி
3. இயந்திர மொழிபெயர்ப்பு
4. மொழியியல்
5. கணினியின்

## 21. 3 தெரிந்துகொள்வோம்

**பயிற்சிகள்**

**அ) பொருத்துக (பக்கம் எண்: 60)**

| | | |
|---|---|---|
| 1. நான்காம் வேற்றுமைத்தொகை | – | என் மகன் |
| 2. ஐந்தாம் வேற்றுமைத் தொகை | – | ஊர் நீங்கினான் |
| 3. ஆறாம் வேற்றுமைத் தொகை | – | என் பை |
| 4. ஏழாம் வேற்றுமைத் தொகை | – | காட்டு யானை |
| 5. இரண்டாம் வேற்றுமைத் தொகை | – | பாடம் படித்தான் |
| 6. மூன்றாம் வேற்றுமைத் தொகை | – | வெள்ளிக் கிண்ணம் |

ஆ) கீழ்க்காணும் வேற்றுமைத்தொகைத் தொடர்களை விரித்து எழுதுக. (பக்கம் எண்: 63)

1. பாலைப் பருகினான்
2. தமிழில் கற்றாள்
3. வாளை வீசினர்
4. ஊரின் நீங்கினான்
5. எனது வீடு

இ) பொருந்தாததைத் தெரிவு செய்க (பக்கம் எண்: 61)

1. எனது மகள்
2. கையை எழுதினான்
3. மாணவனைப் பரிசு கொடுத்தார்
4. செடியில் நீர் ஊற்றினான்
5. இந்தியாகண் வடக்கு இமயம்

ஈ) சரியான சொற்றொடருக்கு (✓) குறியிடுக (பக்கம் எண்: 61)

1. ஓவியா வீட்டிற்குச் சென்றாள் – ✓
2. மாறன் கையால் தொழுதான் – ✓
3. முருகனது புத்தகத்தைக் காணவில்லை –✓
4. யானை வலியால் துடித்தது – ✓
5. கொடையில் சிறந்தவர் பாரி – ✓

உ) கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமாக வேற்றுமைத்தொகைத் தொடர்களை எழுதுக (பக்கம் எண்: 64)

1. மலர் பறித்தாள்.
2. கை தொழுதாள்.
3. காட்டுமான்.
4. ஆசிரியர் பரிசு கொடுத்தார்.
5. ஊர் செல்கிறார்கள்.

ஊ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் மறைந்துள்ள வேற்றுமைத் தொகைகளை விரித்து எழுதுக. (பக்கம் எண்: 62)

1. மொழியைக் கண்டறிந்தான்
2. சிந்தனையை வளர்த்தான்
3. அவனது அறிவு
4. தன் கருத்தை உணர்த்தினான்
5. எண்ணத்தைப் புரிந்துகொண்டான்

## 21.4 மொழியோடு விளையாடுவோம்

வட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொல் முடியுமாறு புதிய சொற்கள் உருவாக்குக. (பக்கம் எண்: 63)

1. பேசி – கைப்பேசி; தொலைபேசி; அலைபேசி; செல்பேசி
2. பலகை – கரும்பலகை; வட்டப்பலகை; மரப்பலகை; தங்கப்பலகை
3. தை – பாதை; கதை; மேதை; நத்தை
4. இயல் – மொழியியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல்
5. கலை – நுண்கலை, நிகழ்த்துக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை

## 21.5 கேட்டல் கருத்தறிதல்

வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 64)

1. வேடன் காட்டில் விலங்கைத் தேடி காடு முழுவதும் சுற்றித் திரிந்ததால். மிகவும் களைப்படைந்தான்.

2. பறவையைக் கண்ட வேடன், உடனே தன் கையிலிருந்த அம்பைக் கொண்டு அதனை வீழ்த்தினான்.

3. தன் குஞ்சுகளுக்கு அதன் வாயில் இருந்த மீனைக் கொடுப்பதற்காக பறந்து சென்றது.

4. வேடன், மரத்தின் உச்சியில் உள்ள ஒரு கூட்டில் நான்கு குஞ்சுப்பறவைகள், அடிபட்ட பறவை போட்ட மீனைக் கொத்திக் கொண்டிருப்பதைக் கண்டான்.

5. பறவையின் தாய்மை உள்ளத்தைக் கண்டு வேடன் பெருமிதம் கொண்டான்.

## 21.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 66)**

1. **தொழில்நுட்பம்**
   நவீன உலகில் கணினி **தொழில்நுட்பம்** வேகமாக வளர்ந்துள்ளது.

2. **மொழிபெயர்ப்பு**
   கணினி மூலம் மொழிபெயர்ப்பது இயந்திர **மொழிபெயர்ப்பு** ஆகும்.

3. **செல்பேசி**
   இன்றைய காலத்தில் **செல்பேசி** இன்றியமையாத ஒரு பொருளாக உள்ளது.

4. **அகராதி**
   மென்பொருள்களைப் பயன்படுத்தி மிக எளிதாக **அகராதிகள்** தயாரிக்க முடியும்.

## 21.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 67)

A search engine is a tool that helps you find information. Information search engines in Tamil have been very successful. For example, a question-answering tool understands questions asked in a natural language like Tamil and provides accurate answers to the questions asked.

# பாடம் – 22

## 22.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 72)

1. தொழில்நுட்பம் என்பது, பல்வேறு அறிவியல் துறைகளின் அடிப்படையில் இயந்திரங்கள், கட்டடங்கள், சாலைகள், விமானங்கள், கப்பல்கள் போன்றவற்றை உருவாக்குதலும் அவற்றைப் பராமரித்தலும் ஆகும்.

2. வேளாண்மை, பாதுகாப்பு, கட்டுமானம், கைவினைப்பொருள்கள், உற்பத்தி எனப் பல தொழில் நுட்பங்களில் பழந்தமிழர்கள் சிறந்து விளங்கினர்.

3. கப்பல் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் வல்லுநர்கள் 'கம்மியர்கள்' என அழைக்கப்பட்டனர். பழுது பட்ட கலன்களைச் செப்பனிடுவது இவர்களது பணி ஆகும்.

4. வங்கம், பாதை, தோணி, யாணம், மதலை, திமில், பாறு, அம்பி, ஓங்கல், ஓடம், கலம், கட்டை, சொங்கு, கரிசல், வள்ளம், பஃடு, பஃறி, பகடு, பட்டிகை, படுவை, புணை, மிதவை, தெப்பம், சதா, நவ்வி, போதம், தொள்ளை, நாவாய், கப்பல் என்பன மரக்கலத்தின் வகைகளைக் குறிக்கும் பெயர்களாகும்.

5. கடல் அலையில் அசையும் நாவாய்கள் பார்ப்பதற்குக் கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானைகள் அசைவது போல் இருந்தன என்று நாவாயை யானையுடன் ஒப்புமைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது.

### ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 72)

1. சிறிய படகு
2. நாவாய்
3. கம்மியர்
4. பாய்மரக் கப்பல்
5. காப்பிய

### இ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 72)

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் + இலக்கியம் | = | தமிழிலக்கியம் |
| 2. | பணி + அமர்த்தப்பட்டனர் | = | பணியமர்த்தப்பட்டனர் |
| 3. | பாய்மரம் + கப்பல் | = | பாய்மரக்கப்பல் |
| 4. | காப்பியம் + நூல் | = | காப்பியநூல் |
| 5. | முகம் + வடிவம் | = | முகவடிவம் |

**ஈ) பிரித்து எழுதுக (பக்கம் எண்: 72)**

1. கவினுற = கவின் + உற
2. மரக்கலன் = மரம் + கலன்
3. கட்டுத்தறி = கட்டு + தறி
4. உடனிருப்பர் = உடன் + இருப்பர்
5. தொழிற்கூடம் = தொழில் + கூடம்

## 22.3 தெரிந்துகொள்வோம்

**பயிற்சிகள்**

**அ) கோடிட்ட இடத்தில் சரியான உவமைத் தொடரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. (பக்கம் எண்: 74)**

1. இலைமறை காய்போல
2. உருவும் நிழலும் போல
3. கப்பல் கவிழ்ந்தாற் போல

**ஆ) உவமை தொடரையும் பொருளையும் பொருத்துக (பக்கம் எண்: 74)**

1. கொழுகொம்பற்ற கொடி போல – ஆதரவின்றி இருத்தல்
2. உருவமும் நிழலும் போல – இணைபிரியாமல் இருத்தல்
3. இலைமறை காய்போல – யாருக்கும் தெரியாமல் இருத்தல்

## 22.4 மொழியோடு விளையாடுவோம்.

**குறிப்புகளைப் படித்து, கட்டங்களிலுள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக. (பக்கம் எண்: 74)**

1. சிற்பம்
2. கவிதை
3. சூறாவளி
4. நடனம்
5. கடல்
6. சிரிப்பு
7. விண்மீன்
8. மல்லி
9. கப்பல்
10. மலை

## 22.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 75)

1. மலர்கள்
2. செடி கொடிகளிலும், மரங்களிலும் பூத்துக்குலுங்கும் மலர்களைப் பார்த்து இரசித்து வியந்து கொண்டிருப்பார்.
3. பெர்னாட்ஷா தமது இல்லத்தில் மலர்களைக் கொய்து அலங்காரப் பூச்செடிகளில் வைக்கும் பழக்கம் இல்லாதவர்.
4. நண்பர் பெர்னாட்ஷாவிடம், "மலர்களிடம் இவ்வளவு பிரியம் வைத்துள்ள நீங்கள்அவற்றைக் கொய்து வீட்டில் வைப்பதில்லையே, ஏன்?" எனக் கேட்டார்.
5. பெர்னாட்ஷா, "மலர்களிடம் எனக்குப் பிரியம் தான். அவற்றைப் பார்த்து இரசிக்கலாம். பறித்துதான் இரசிக்க வேண்டும் என்பதில்லையே! ஒவ்வொன்றும் அது இருக்கும் இடத்தில்தான் உண்மையான அழகைப் பெறும்" என்று நண்பருக்கு விடையளித்தார்.

## 22.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 77)

1. **தொழில் நுட்ப அறிவு**
   இன்றைய நவீன உலகில் **தொழி நுட்ப அறிவு** மிகவும் வளர்ந்துள்ளது.

2. **துறைமுகம்**
   கப்பல்கள் கடலில் ஒரு நாட்டிற்குள் வந்து நிற்கும் இடம் **துறைமுகம்** ஆகும்.

3. **கப்பல்**
   ஒரு நாட்டின் வாணிபம் என்பது **கப்பல்** வழியாகத்தான் பெருமளவில் நடக்கும்.

## 22.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 77)

Today's world is a scientific world. Scientific ideas are growing every day and making amazing achievements. Such scientific developments have brought about changes in lifestyle, civilization, and economy.

## 22.11 உயர்நிலைத் திறன்

### வினாக்கள்– விடைகள்

1. மூதறிஞர் இராஜாஜி எப்போது எதற்காக அமெரிக்கா சென்றார்?
2. அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் யார்?
3. மூதறிஞர் இராஜாஜியை யார் சூழ்ந்து கொண்டார்கள்?
4. பேச்சு வார்த்தை எங்கு நடைபெற்றது?
5. செய்தியாளர்களின் கேள்விக்கு இராஜாஜி கூறிய பதில் என்ன?

# பாடம் – 23

## 23.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 82)

1. அன்பு, அறிவு
2. அன்பு சுயநலம் மிக்கவன். பொய், பொறாமை போன்ற தீயகுணங்களைப் பெற்றிருந்தான்.
3. பள்ளியில் நடந்த விளையாட்டுப் போட்டியில் அன்பு, திடீரென தனக்கு முன்னால் ஓடிய மாறனை இடித்து விட்டு ஓடினான். இதனால் நிலை தடுமாறிய மாறன் ஓட முயல்வதற்குள் அன்பு வெற்றிப் பெற்றான்.
4. ஆசிரியர் அன்புவின் குணத்தை மாற்ற எண்ணி மாணவர்களிடம் தாங்கள் செய்த நற்செயல்களைப் பற்றிக் கூற வேண்டும் என்றார். மேலும் அனைவராலும் பாராட்டும் வகையில் நற்செயல்களைச் செய்த ஒருவருக்கு அழகான பெட்டி பரிசாக வழங்கப்படும் என்றார்.
5. அன்பு, என்னுடைய தீய செயல்கள் பலருக்குத் துன்பத்தைத் தந்தன. என் செய்கையால் மற்றவர்கள் எந்த அளவிற்கு வருத்தம் அடைந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்; ஆகவே, இனிமேல் நான் எல்லாரிடத்தும் அன்பு காட்டுவேன்; பெரியோரை மதிப்பேன்; பொய், பொறாமை ஆகிய தீய குணங்களை நீக்குவேன்; எனவே, என்னைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு அளியுங்கள் என்றான்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்கம் எண்: 82)

1. இருவர்
2. அன்பு
3. முதற்பரிசு
4. தந்திரம்
5. பொறாமை

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 82)

1. நல்லூர்
2. கண்ணாடியால்
3. அன்பு
4. வேலைப்பாடு
5. ஊதல் ஒலி

### ஈ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 82)

1. இரண்டாம் + இடம் = இரண்டாமிடம்
2. மரத்தால் + ஆன = மரத்தாலான
3. சொல்ல + இல்லை = சொல்லவில்லை
4. உண்மை + இல்லை = உண்மையில்லை
5. கலங்கி + இருந்தன = கலங்கியிருந்தன

## 23.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) பொருத்துக (பக்கம் எண்: 86)

1. திணை வழுவமைதி – இனியா கடைக்குச் சென்றது.
2. பால் வழுவமைதி – கண்மணி! வாடா இராசா!
3. இட வழுவமைதி – நண்பரின் கருத்து யாதோ?
4. கால வழுவமைதி – இதோ உண்டேன்.
5. மரபு வழுவமைதி – இம்மாடு யான் வாங்கியது.

### ஆ) கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகை வழுவமைதி எனத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்கம் எண்: 86)

1. திணை வழுவமைதி
2. இட வழுவமைதி
3. கால வழுவமைதி
4. மரபு வழுவமைதி
5. பால் வழுவமைதி

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 87)

1. சிட்டுக்குருவி
2. சிட்டுக்குருவிகளைப் பாதுகாத்தல்

3. விழாவின் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் பூமிதாசன். அவர் ஒரு பறவைகள் ஆர்வலர்.
4. பறவைகள் மற்றும் சிட்டுக்குருவிகளை அடையாளம் காணல்; பெரு நகரங்களில் பறவைகளைக் காப்பதற்கு நாம் செய்ய வேண்டியவை; குருவிக்கூடுகள் தயாரிக்கும் முறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.
5. தனலட்சுமி மேல்நிலைப் பள்ளி, மாலை 3.00 – 6.00 வரை

## 23.4 மொழியோடு விளையாடுவோம்.

### குறிப்புகளைப் படித்து, சொற்களைக் கண்டறிக (பக்கம் எண்: 88)

1. மல்லிகை
2. முருங்கை
3. தும்பிக்கை
4. எதுகை
5. நகை
6. இலங்கை
7. முன்னெச்சரிக்கை
8. அழுகை
9. புன்னகை
10. தன்னம்பிக்கை / நம்பிக்கை

## 23.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 89)

1. கடுமையான கோபம், மூர்க்கத்தனம்

2. முருகன் தட்டச்சு செய்யும் போது தவறு செய்து விட்டார்.

3. முருகனிடம் மற்ற ஊழியர்கள், "என்னப்பா, அந்த உயர் அலுவலர் இப்படிக் கடுமையாகத் திட்டுகிறாரே, உனக்கு வருத்தமாக இல்லையா?" என்று கேட்டனர்.

4. முருகன், உயர்அலுவலர், அவருடைய கடுமையான கோபத்தையும் மூர்க்கத்தனத்தையும் எப்படியாவது என் மீது திணிக்கப் பார்க்கிறார். நான் அதை வாங்கிக் கொள்ளவில்லை. மேலும், நான் செய்த தவற்றைக் கண்டறிந்து திருத்தம் செய்வதோடு, அடுத்த வேலையில் கவனம்

செலுத்துவதில் என் நேரத்தைச் செலவிடுகிறேன் என்று ஊழியர்களுக்குப் பதிலளித்தார்.

5. வேலையை முழுமனதோடு பிழையில்லாமல் செய்யும் போது பணி நிறைவு ஏற்படும்.

## 23.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 91)**

1. **நற்செயல்கள்** – பிறருக்கு நாம் செய்யும் **நற்செயல்கள்** நமக்கு துன்பம் வரும் நேரத்தில் கைக்கொடுக்கும்.
2. **அன்பு** – பிற உயிர்கள் இடத்தில் **அன்பு** கொள்ளுதல் வேண்டும்.
3. **இன்சொல்** – நான் எப்பொழுதும் அனைவரிடத்திலும் **இன்சொல்** மட்டுமே பேசுவேன்.

## 23.9 மொழி பெயர்ப்போம்

ஒரு தொண்டு நிறுவனம் என்பது நோய்வாய்ப் பட்டவர்கள் அல்லது மிகவும் வறுமையில் வாடும் ஏழைகள் அல்லது உடல் உறுப்பு குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவுவதற்காக பணம் திரட்டும் ஒரு அமைப்பாகும்.

## 23.11. உயர் நிலைத்திறன்

**ஒரு கதையின் பாதிப்பகுதி மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் படித்து, உங்கள் கற்பனைக்கேற்ப, மீதிக்கதையைக் கூறுக.**

**கதை தொடர்ச்சி:** கந்தனும் அவன் மனைவியும் இராமனிடம் நாங்கள் இன்று வெளியே செல்கிறோம் அதனால் உணவு சமைக்கவில்லை என்று கூறினர். இராமனும் சரி என்று அவர்கள் வீட்டு வெளித்திண்ணையில் அமர்ந்து விட்டான். இப்போது அவர்களால் வீட்டிற்குள்ளும் இருக்க முடியாது. வேறு வழியில்லாமல் இராமனுக்கு சமைத்து உணவு போட்டனர். இராமன் அவர்களிடம் பொய் பேசி அடுத்தவர்களை ஏமாற்றாமல் தருமம் செய்யுங்கள் அது தான் உங்களுக்கு நல்லது. உங்கள் தவறை உணர்த்தத்தான் நான் இவ்வாறு செய்தேன் என்றான். கந்தனும் அவன் மனைவியும் தங்கள் தவறை உணந்து திருந்தினர்.

# பாடம் – 24

## 24.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 96)

1. நாலடி நானூறு, வேளாண் வேதம்

2. நாலடியார், திருக்குறள்

3. ஜி.யு. போப்

4. பெரியோர் நட்பு, பிறை நிலவைப் போன்றது, நாள் தோறும் படிப்படியாக வளரும். சிறியோர் (தகுதியில்லாதவர்) நட்பு முழுநிலவைப் போன்றது. நாள்தோறும் சிறிது சிறிதாகக் குறைந்து, தானே தேய்ந்து போகும் என்னும் கருத்தில் அமைந்த பாடல், நட்பின் பெருமையை எடுத்துக் கூறுகிறது.

5. மிகச்சிறிய ஆலம் விதை, வளர்ந்து ஓங்கித் வளர்ந்து தழைத்து நிழலை உயிரினங்களுக்குத் தந்து உதவுகிறது. அது போல, அறம் செய்யும் பொருள் மிகக்குறைவாக இருப்பினும், அது தகுதியுடையவர் கையில் சேர்ந்தால் அதன் பயன் வானத்தை விட உயர்ந்ததாகும் என அறத்தின் சிறப்பை நாலடியார் பாடல் விளக்குகிறது.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்கம் எண்: 96)

1. அ) தனிப்பாடல்
2. ஆ) 40
3. ஆ) நாலடியார்
4. அ) நாலடியாரும் திருக்குறளும்
5. அ) பதினொன்று

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக (பக்க எண்: 96)

1. அறநூல்கள்
2. நாலடியார்
3. நானூறு
4. பிறைநிலவு
5. முழுநிலவு

### ஈ) சேர்த்து எழுதுக (பக்கம் எண்: 96)

| | | | |
|---|---|---|---|
| 1. | சொல்லுக்கு + உறுதி | = | சொல்லுக்குறுதி |
| 2. | நன்மை + பண்பு | = | நற்பண்பு |
| 3. | முழுமை + நிலவு | = | முழுநிலவு |
| 4. | அறம் + கருத்து | = | அறக்கருத்து |
| 5. | நான்கு + நூறு | = | நானூறு |

## 24.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் சொற்றொடரில் வல்லின மெய் தவறாக மிகுந்துள்ள இடங்களைக் கண்டறிக (பக்க எண்: 98)

1. அதுத் தன்
2. அதுக் காட்டில்
3. எவ்வளவுப் பெரியதாயினும்
4. கடலைத் தின்றான்
5. இரண்டுக் குயவர்கள்

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்க எண்: 98)

1. ஈ) அது தனக்குத் தானே
2. ஆ) கழுதை பொறாமை கொண்டது
3. அ) இரண்டுகாலையும்
4. இ) தொல்லை கொடுக்கிறான்
5. அ) அவர்களோடு தானும்

## 24.4 மொழியோடு விளையாடுவோம்.

### கீழ்க்காணும் குறிப்புச் சொற்களிலிருந்து உரிய சொற்களைக் கண்டறிந்து, கட்டத்தை நிரப்புக (பக்கம் எண்: 99)

1. மதி
2. வாள்
3. உருளை
4. தை
5. கை
6. குகை
7. நெல்

## 24.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 100)

1. வேலன், அறிவுக்கரசனுக்குச் சொந்தமான நிலத்தில் உழவு வேலை செய்து வந்தான்.

2. வேலன் நிலத்தை உழும் போது தங்க மோதிரத்தைக் கண்டெடுத்தான்.

3. மோதிரத்தைப் பார்த்ததும் வேலனின் மனைவி காதுக்குக் கம்மல் செய்து போட்டுக் கொள்ளலாம் என்றாள்.

4. வேலன், நிலம் அறிவுக்கரசனுக்குச் சொந்தமானது. நான் கூலிக்காகவே உழுகிறேன். நிலத்தில் கிடைப்பது அவரைத்தானே சேரும். நாம் எடுத்துக் கொள்வது அவருக்குத் துரோகம் செய்வதாகும் என்றான்.

5. அறிவுக்கரசன், வேலனிடம் நிலத்தை உழவில்லை என்றால் மோதிரம் கிடைத்திருக்காது. மேலும் மோதிரத்தை எடுத்துக் கொள்ளாமல் என்னிடம் கொடுத்த உன்னுடைய நேர்மை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எனவே இந்த மோதிரம் உனக்கு தான் சொந்தம் என்று வேலனுக்கே பரிசாகக் கொடுத்தார்.

## 24.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்க எண் 102)**

1. **ஒழுக்கம்**
   **ஒழுக்கமாக** இருந்தால் எல்லாச் சிறப்பையும் பெறலாம்.

2. **புகழ்**
   செயற்கரிய செயலைச் செய்யும் போது **புகழ்** தேடாமல் நம்மை வந்து சேரும்.

3. **பெருமை**
   தன் மகன் சிறப்புடன் வாழ்வதைக் கண்ட தந்தை மிகவும் **பெருமை** கொண்டார்.

## 24.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: )

Simplicity is a virtue that is of the highest value. Those who lead a simple life have pure hearts. People like Mahatma Gandhi and Vivekananda Tolstoy followed a simple life throughout their lives.

## 24.11 உயர்நிலைத் திறன்

**பின்வரும் அழைப்பிதழைப் புரிந்துகொள்ளும் வகையில் வினாக்கள்– விடைகள் உருவாக்குக.**

**வினாக்கள்– விடைகள்**

1. கருத்தரங்கத்தின் தலைப்பு என்ன?
2. கருத்தரங்கம் எங்கு நடைபெறுகிறது?
3. கருத்தரங்கத்தினை யார் நடத்துகிறார்கள்?
4. கருத்தரங்கத்தில் யார் தலைமையுரை ஆற்றுகிறார்?
5. கருத்தரஙகத்தின் கருத்தாளர்கள் பெயர்களை எழுதுக.

# மீள்பார்வை

### 1. கீழ்க்காணும் தொடர்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 105)

1. வில்லுப்பாட்டு
2. சுஜாதா
3. ஓரி
4. பொருநை
5. பாரி

### 2. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை எழுதுக. (பக்க எண்: 105)

1. உடல் உறுப்புகளைச் சேமித்து வைக்கும் இடத்தை உயிர் காக்கும் வங்கி என்பர்.

2. மனிதன், தன் தேவைகளை மொழியின் மூலம் பெறுகிறான். இதன் அடிப்படையில் மொழிகற்றல், திறம்பட கையாளுதல் ஆகியவை உற்றுநோக்கப்படுகின்றன. இவற்றை அறிந்து கொண்டு கணினிக்கு அளிக்கும் வழிமுறைகள் ஆராயப்படுகின்றன. இதனையே இயற்கைமொழி ஆய்வு என்கிறோம்.

3. மண்ணில் புதையுண்ட பண்டைய நாகரிகச் சின்னங்களைத் தோண்டியெடுத்து மனிதன் வாழ்ந்த காலத்தையும் அவனது பண்பாட்டையும் ஆராய்வது அகழாய்வு என்பர். இந்தியாவில் முதல் அகழாய்வு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்டது.

4. காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பை மட்டும் உணர்த்துவது குறிப்புப்பெயரெச்சம் எனப்படும். எ.கா: பெரிய மலை; அழகிய ஓவியம்

5. மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத பண்பு ஒழுக்கம். அவ்வொழுக்க நெறியைப் பின்பற்றுமாறு அறிவுறுத்துவதே 'அறம்' என்பர்.

**3. பொருத்துக. (பக்கம் எண்: 105)**

1. பாடிய பெண் – உடன்பாட்டுப் பெயரெச்சம்
2. வரையாது நின்றாள் – ஈறுகெடாத எதிர்மறை வினையெச்சம்
3. உண்ணாமல் சென்றது – எதிர்மறை வினையெச்சம்
4. ஓடாத குதிரை – ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம்
5. நல்ல மாணவன் – குறிப்புப் பெயரெச்சம்

**4. கீழ்க்காணும் கூற்றுகள் சரியா? (✓) தவறா? (X) என்பதைக் குறியிட்டுக் காட்டுக. (பக்க எண்: 105)**

1. சரி
2. தவறு
3. சரி
4. தவறு
5. சரி

**5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 105)**

1. "ஆற்றுப்பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அ வ்ஆறு
ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும் – ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து"

2. இறுதி எழுத்து மறையாமல் வருவது, ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும். எ.கா: ஓடாத குதிரை; பாடாத பெண்

3. ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் இடையே வேற்றுமையுருபு மறைந்து வருவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

4. ஒரு செயல் முடிந்ததைக் குறிப்பது வினைமுற்று. இது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இரண்டு வகைப்படும்.

5. உலகின் முதல் கண் வங்கியை நியூயார்க்கில் 1944 ஆம் ஆண்டு மருத்துவர் ஆர்.டௌன்லி பேடன் என்பவர் தொடங்கினார்.

6. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர்களை உருவாக்குக. (பக்கம் எண்: 106)

1. விழிப்புணர்வு – நேற்று மனிதநேயம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.
2. சொற்களஞ்சியம் – சொற்களஞ்சியம் அகராதி பணிக்குப் பயன்படுகின்றன.
3. கொடை – கடையெழு வள்ளல்கள் கொடையில் சிறந்து விளங்கினர்.
4. துறைமுகம் – துறைமுகத்தில் கப்பல் வந்து நிற்கும்.
5. முது மக்கள் தாழி – ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

7. கீழ்க்காணும் உரைப்பகுதியில் கோடிட்ட இடங்களைப் பொருத்தமான உவமைத் தொடர் கொண்டு நிரப்புக. (பக்கம் எண்: 106)

1. மலரும் மணமும்
2. கொழுகொம்பற்ற கொடி
3. இலைமறை காய்

8. பின்வரும் விடுகதைகளுக்குச் சரியான விடையைக் கண்டறிந்து எழுதுக. (பக்கம் எண்: 106)

1. கரும்பு
2. பட்டாசு
3. கண்
4. உப்பு
5. கடிகாரம்

9. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 106)

1. ஆ) சிவகளை
2. அ) ஔவையார்
3. ஈ) நாலடியார்
4. இ) கர்நாடகா
5. அ) பாரதியார்

**10. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 107)**

1. சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும் போது, இடையில் க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்யெழுத்துகளுள் எதுவும் தோன்றவில்லை எனில், அதனை வல்லினம் மிகா இடங்கள் என்பர்.

   விதி 1:

   அது என்னும் சுட்டுச்சொல்லின் பின் வல்லினம் மிகாது.

   எ.கா: அது தனக்குத் தானே

   விதி 2:

   இரண்டு என்னும் எண்ணுப் பெயரின் பின் வல்லினம் மிகாது.

   எ.கா: இரண்டுகாலையும்

2. நாலடியார் என்பது அறநூல்களில் ஒன்றாகும். இந்நூலில் நானூறு பாடல்கள் உள்ளன. இந்நூலானது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளையும் நாற்பது அதிகாரங்களையும் கொண்டது. 'நாலடி நானூறு', 'வேளாண் வேதம்' என்பன இந்நூலுக்கு வழங்கும் வேறு பெயர்கள். இந்நூலில் உள்ள பாடல்கள் சமண முனிவர்களால் இயற்றப்பட்டன.

3. சில சூழ்நிலைகளில் வழுவாக (தவறாக) இருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்வது வழுவமைதியாகும். வழுவமைதி ஐந்து வகைப்படும். அவை திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இட வழுவமைதி, கால வழுவமைதி, மரபு வழுவமைதி.

4. கடலில் செலுத்தப்படும் மரக்கலன்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டன. வங்கம், பாதை, தோணி, யாணம், மதலை, திமில், பாறு, அம்பி, ஓங்கல், ஓடம், கலம், கட்டை, சொங்கு, கரிசல், வள்ளம், பஃடு, பஃறி, பகடு, பட்டிகை, படுவை, புணை, மிதவை, தெப்பம், சதா, நவ்வி, போதம், தொள்ளை, நாவாய், கப்பல் என்பன மரக்கலத்தின் வகைகளைக் குறிக்கும் பெயர்களாகும்.

5. மொழியைப் பற்றி ஆராயும் அறிவியல் மொழியியல் ஆகும். மொழியின் அமைப்பை ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் என்ற நிலைகளில் ஆராயப்படுகின்றன.

**11. பழமொழிகளை நிரப்புக. (பக்கம் எண்: 107)**

1. ஊருக்கு
2. செய
3. குறையாது
4. முகத்தில்
5. செய்

**12. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக. (பக்கம் எண்: 107)**

1. தோற்றம்
2. காவாதான்
3. காண்பது
4. எள்ளாமை
5. சால்பின்

**13. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக (பக்கம் எண்: 107)**

1. Expectation – எதிர்பார்ப்பு
2. Antiquities – தொல்பொருள்கள்
3. Mercury – பாதரசம்
4. Scanner – வருடி
5. Data center – தரவுமையம்
6. Transplantation – மாற்று அறுவை சிகிச்சை
7. Allergy – ஒவ்வாமை
8. Programming – நிரலாக்கம்
9. Syntax – தொடரியல்
10. Semantics –பொருண்மையியல்

**14.பின்வரும் விளம்பரத்தைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 108)**

**விடைகள்:**

1. வேந்தன் சிலம்பக்கலை பயிற்சிக்கூடம்
2. சென்னை மாவட்ட சிலம்பாட்ட கழகம், தமிழ்நாடு சிலம்பாட்ட கழகம், இந்திய சிலம்ப சம்மேளனம்.
3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
4. போர்கலை சிலம்பம், மான் கொம்பு, வாள் கேடயம், அலங்கார சிலம்பம், வாள் வீச்சு, சுருள்வாள் வீச்சு, வேல்கம்பு மற்றும் தொடுமுறை சிலம்பம் போன்ற முறைகள் கற்றுத்தரப்படுகின்றன.
5. தமிழ் இணையக் கல்விக்கழகத்தில், 09.07.2023 அன்று காலை 7.00 – 9.00 மணிவரை நடைபெறுகிறது.

15. கீழ்க்காணு ம் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக. (பக்க எண்:108)

1. தொல்பொருள் கோட்பாடு, அகழ்வாராய்ச்சியாளர்கள் புதிரின் சில பகுதிகளில் தங்கள் சொந்த கருத்துக்களை வைக்காமல், அகழ்வாராய்ச்சி தளங்களை மிகவும் புறநிலையாகப் பார்க்க உதவியது.

2. இயற்கைக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முனைந்ததால் தான், பண்டைய தமிழர்களுடன் அறிவியல் கருத்துக்களும் இணைந்திருந்தின. உயிரியல், வானியல், கணிதம், மருத்துவம், உயிரியல், கால வரிசை, கைவினை, புவியியல், அறிவியல் போன்ற துறைகளில் பரந்துப்பட்ட அறிவுடன் அவர்கள் வாழ்க்கையை வாழ்ந்திருந்தனர்.

3. இயற்கை மொழி செயலாக்கம் என்பது கணினி அறிவியல், மனித மொழி மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் கலவையாகும். இது மனித மொழிகளைப் புரிந்துகொள்ளவும் பகுப்பாய்வு செய்யவும் இயந்திரங்களால் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமாகும்.

4. ஒழுக்கம் என்பது ஒரு தனிநபரின் நடத்தை மற்றும் முடிவுகளை வழிநடத்தும் மதிப்புகள், நம்பிக்கைகள் மற்றும் கொள்கைகளின் தொகுப்பாகும். இது ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது கலாச்சாரத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை விதியாகும்.

5. உறுப்பு தானம் என்பது ஒரு நபரிடமிருந்து ஒரு உறுப்பு அல்லது திசுக்களை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி மற்றொரு நபருக்கு மாற்றும் செயல் முறையாகும். பெறுநரின் உறுப்பு செயலிழந்து விட்டாலோ அல்லது நோய் அல்லது காயத்தால் சேதமடைந்தாலோ மாற்று அறுவை சிகிச்சை அவசியம்.

# பாடம் – 25

## 25.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 112)

1. உடல் நலத்துடன் வாழ்வதற்குச் சத்தான உணவு, ஓய்வு, உடற்பயிற்சி, மருத்துவப் பரிசோதனை, சுற்றுச்சூழல் ஆகியவை இன்றியமையாத காரணிகளாக உள்ளன.

2. உடல்நலத்துடன் வாழ சத்து மிகுந்த உணவுகளை உண்ண வேண்டும். பழங்களுள் மா, பலா, வாழை, நாவல், நெல்லி, இலந்தை, மாதுளை, பப்பாளி முதலியவை சத்துள்ளவை. கீரைகளுள் முருங்கை, பொன்னாங்கண்ணி, கரிசாலை, சிறுகீரை, அகத்தி முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாசிப்பயறு, அவரை, மொச்சை போன்ற பயறு வகைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சிறுதானியங்களான வரகு, சாமை, தினை, கேழ்வரகு, கம்பு போன்றவை உடலுக்கும் மிகவும் நன்மை தரும் உணவுகளாகும். ஊண் விரும்புவர்கள் அளவோடு சேர்த்துக் கொள்ளலாம். இத்தகைய சத்தான உணவுகள் உடல்நலத்தைக் காக்கும்.

3. உடலைப் பேணுவதால் உடல் வளர்ச்சி சீராக இருக்கும். உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைக்கும். நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும்

4. உடலுக்கும் உயிருக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. உடலும் உயிரும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகின்றன. உடல் நலம் உயிருக்கு நன்மையையும் உடல் நலம் இன்மை உயிருக்குத் தீமையையும் ஏற்படுத்துகிறது. உடலும் உயிரும் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் நோய் நொடியின்றி நெடுநாள் வாழ முடிகிறது.

5. நினைத்த நேரத்தில் உணவை உண்ணக்கூடாது. நன்கு பசித்த பிறகே உணவை உண்ண வேண்டும். அளவோடு உண்பது நலம் தரும். மேலும், உணவினை நொறுக்கித் தின்ன வேண்டும். 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்பது பழமொழி. உணவு உண்ணும் முறைகளைச் சரியாகப் பின்பற்றினால் நோய் ஏற்படாது.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 112)

1. அ) திருமூலர்
2. ஈ) மெதுவாக மென்று உண்ண வேண்டும்
3. அ) காலை
4. இ) உடல்
5. ஈ) மனநலம்

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக, (பக்கம் எண்: 112)

1. மூளையும் உள்ளமும்
2. தியானம்
3. ஔவையார்
4. வரகு
5. மொச்சை

### ஈ) பொருத்துக (பக்கம் எண்: 112)

| | | |
|---|---|---|
| 1. மா, பலா, வாழை | – | பழங்கள் |
| 2. வரகு, சாமை, கம்பு | – | சிறுதானியங்கள் |
| 3. அவரை, மொச்சை | – | பயறு வகைகள் |
| 4. முருங்கை, அகத்தி | – | கீரைகள் |

### உ) சேர்த்து எழுதுக (பக்கம் எண்: 112)

| | | |
|---|---|---|
| 1. உடல் + பயிற்சி | = | உடற்பயிற்சி |
| 2. உடல்நலம் + இன்மை | = | உடல்நலமின்மை |
| 3. நெடுமை + நாள் | = | நெடுநாள் |
| 4. சத்து + உள்ளவை | = | சத்துள்ளவை |
| 5. நோய் + எதிர்ப்பு | = | நோயெதிர்ப்பு |

## 25.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

**அ) கொடுக்கப்பட்ட படத்திலிருந்து திணை, பால், எண், இடம் ஆகியவற்றை எழுதுக. (பக்கம் எண்: 114)**

1. உயர்திணை
2. பலர்பால்
3. பன்மை
4. படர்க்கை
5. இறந்தகாலம்
6. அர்

**ஆ) கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு உயர்திணை / அஃறிணை கண்டறிக. (பக்கம் எண்: 114)**

1. உயர்திணை
2. உயர்திணை
3. அஃறிணை
4. உயர்திணை
5. அஃறிணை

**இ) வந்தான் என்னும் சொல் காட்டும் காலம், பால், திணைஆகியவற்றைக் காண்க. (பக்கம் எண்: 115)**

1. இறந்த
2. ஆண்
3. உயர்

**ஈ) விடை காண்போம். (பக்கம் எண்: 115)**

1. திணை இரண்டு வகைப்படும்.
2. அஃறிணைக்குரியது
3. பால் ஐந்து வகைப்படும்
4. அள், ஆள் என்பது பெண் பாலுக்குரிய விகுதிகளாகும். சான்று: வந்தவள், வந்தாள்.
5. 'சென்றான்' என்னும் சொல்லுக்குத் திணை – உயர்திணை; பால் – ஆண்பால்; எண் – ஒருமை; இடம் –படர்க்கை.

### உ) கோடிட்ட இடத்தை நிரப்புக (பக்கம் எண்: 115)

1. ஆண்
2. இறந்த
3. அஃறிணை
4. படர்க்கை
5. பெண்பால்

### ஊ) பொருத்துக (பக்கம் எண்: 115)

1. வந்தான் – ஆண்பால்
2. வருவாள் – பெண்பால்
3. மேய்ந்தது – ஒன்றன்பால்
4. படித்தனர் – பலர்பால்
5. உறங்கின – பலவின்பால்

## 25.4 மொழியோடு விளையாடுவோம்.

### கீழ்க்காணும் விடுகதைகளுக்குரிய விடைகளின் எழுத்துகள் இடம் மாறியுள்ளன. அவற்றைக் கண்டறிக. (பக்கம் எண்: 116)

1. வானம்
2. தண்ணீர்
3. விண்மீன்கள்
4. விமானம்
5. தேன்கூடு

## 25.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 118)

1. கொழுப்பு நிறைந்த உணவை உண்பதால் உடல் எடை கூடுகிறது.
2. பூண்டு, வெங்காயம்.
3. சோம்பு கலந்த தன்னீரைக் குடித்தால், விரைவிலேயே உடலுள்ள கொழுப்பு குறைந்து விடும்.
4. சுரைக்காய் வயிற்றுச் சதையைக் குறைக்கப் பயன்படுகிறது.
5. நடைப்பயிற்சி, உடற்பயிற்சி

## 25.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 118)

1. **ஆற்றல்**

   உடல் நலத்தைக் காப்பதன் மூலம் நம் உடலும் மனமும் **ஆற்றல்** உடையதாக இருக்கும்,

2. **ஊக்கம்**

   உடலில் **ஊக்கமே** வாழ்வில் வெற்றி தரும்.

3. **மனநலம்**

   வாழ்க்கையில் மகிழ்ச்சி **மனநலம்** காப்பதன் வழியே அமைகிறது.

## 25.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 67)

Based on the amount of nutrients contained in food, food can be divided into six categories: carbohydrates, fats, proteins, vitamins, water, minerals, and salts.

# பாடம் – 26

## 26.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 124)

1. மருத்துவர் சாந்தா, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராகப் பணியில் சேர்ந்தார்.

2. சாந்தா, சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் நிறுவனத்தில் தம்மை இணைத்துக் கொள்ள விரும்பினார். அதனால், தமது அரசு பணியைத் துறந்து விட்டு, பெரும் விருப்பத்துடன் அந்நிறுவனத்தில் சேர்ந்தார்.

3. மருத்துவர் சாந்தா, புற்று நோயால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி அச்சம் கொள்ள வேண்டாம். அந்நோய் குணப்படுத்தக் கூடிய நோய்தான் என நோயாளிகளுக்கு நம்பிக்கை கொடுத்தார்.

4. மருத்துவர் சாந்தா, அரசு மற்றும் தனியாரிடம் நிதியுதவி பெற்று புற்றுநோய் நிறுவனத்தை விரிவுபடுத்தினார்.

5. ஆசியாவின் உயரிய விருதான மகசேசே விருது, இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்ம விபூஷன் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 124)

1. இ) மைலாப்பூர்
2. இ) மகசேசே
3. இ) ஜூலை 1

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 124)

1. மருத்துவத் தொழில்
2. மகப்பேறு
3. மருத்துவர் முத்துலட்சுமி
4. மருத்துவர் சாந்தா
5. உயிரிழப்பு

ஈ) சேர்த்து எழுதுக (பக்கம் எண்: 124)

1. தன்னலம் + அற்ற = தன்னலமற்ற
2. மருத்துவம் + துறை = மருத்துவத்துறை
3. அரசு + பணி = அரசுப்பணி
4. தொடக்கம் + கல்வி = தொடக்கக்கல்வி
5. நன்மை + நாள் = நன்னாள்

## 26.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

அ) கீழ்க்காணும் தொடர்களில் விடுபட்ட வல்லின மெய்களை மிகுத்து எழுதுக. (பக்கம் எண்: 126)

1. உயிர்ச்சத்து கிடைப்பதற்குப் பாலைக் குடிக்க வேண்டும்.
2. கோடைகாலத்தில் நம் உடல் சூட்டைத் தவிர்க்க மோரைப்பருக வேண்டும்.
3. தானியங்களை வீசியதும் அங்குப் பறவைகள் வந்தன.
4. நல்ல பாடலைக் கேட்டால் நமது மனம் மகிழும்.
5. இந்தப் புத்தகம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஆ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் வல்லின மெய் இட்டு எழுதுக, (பக்கம் எண்: 126)

தமிழரசி கலை திருவிழாச் சென்றாள். அங்குக் கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகளைப் பார்த்தாள். கடைகாரர் ஐந்து பொம்மை வாங்கினால் ஒன்று இலவசம் என்றார். எனக்கு அந்தப் பொம்மைதான் வேண்டும் என்று மயில் பொம்மையைச் சுட்டி காட்டினாள் தமிழரசி.

இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. (பக்கம் எண்: 128)

1. சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும் போது க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்கள் மிகுந்து வரும். இவ்வாறு வருவன வல்லினம் மிகும் இடங்களாகும்.

2. வல்லினம் மிகும் இடங்களில் க்,ச்,த்,ப் ஆகிய மெய் எழுத்துகள் இடம் பெறுகின்றன.

3. வல்லின மெய்களை மிகுத்து எழுதுவதற்கு விதிகள் உள்ளன. அவற்றுள் விதி 2: அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபுகள் பின் வல்லினம் மிகும். எ.கா: எந்தப்பக்கம்; அந்தக்காகம்

4. காகத்தின் தந்திரம்

5. விதி – 4 இரண்டாம் வேற்றுமை விரியில் (ஐ) வல்லினம் மிகும். எ.கா: பானையைக் கண்டுபிடித்தது. இளநீரைக் குடிப்பதற்கு.

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 127)

1. இலவச வர்ம மருத்துவ முகாமைப் பற்றியது.
2. மருத்துவ முகாம் சென்னை, கிழக்கு கடற்கரை சாலை, சென்னையில் நடைபெறுகிறது.
3. வர்மம், தொக்கணம், ஒற்றடம், நீராவிகுளியல், மண்குளியல், தாரை, கட்டுமுறைகள், யோகா, உடற்பயிற்சி.
4. நலம் மருத்துவமையம்
5. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## 26.4 மொழியோடு விளையாடுவோம்.

**கீழ்க்காணும் எடுத்துக்காட்டைப் போல், ஒரு சொற்றொடரிலிருந்து ஒவ்வொரு சொல்லாக நீக்கி, பொருள் தரும் தொடர்களை உருவாக்குக. (பக்கம் எண்: 128)**

அ) அன்று இரவு எங்கும் கொண்டாட்டமாக ஒரே இருந்தது.

1. அன்று இரவு எங்கும் கொண்டாட்டமாக இருந்தது.
2. அன்று இரவு கொண்டாட்டமாக இருந்தது.
3. இரவு கொண்டாட்டமாக இருந்தது.

ஆ) நேற்று கொட்டும் மழையிலும் கூட்டம் கலையாமல் இருந்தது.

1. நேற்று மழையிலும் கூட்டம் கலையாமல் இருந்தது.
2. மழையிலும் கூட்டம் கலையாமல் இருந்தது.
3. மழையிலும் கூட்டம் இருந்தது.

இ) நான் நேற்று பெற்றோர்களுடன் சுற்றுலா சென்றேன்.

1. நான்பெற்றோர்களுடன் சுற்றுலா சென்றேன்.
2. பெற்றோர்களுடன் சுற்றுலா சென்றேன்.
3. சுற்றுலா சென்றேன்.

ஈ) யாழினி தோட்டத்தில் பூக்களைப் பறித்தாள்.

1. யாழினி பூக்களைப் பறித்தாள்
2. யாழினி பறித்தாள்.
3, பறித்தாள்.

உ) கடலில் விலைமதிப்பற்ற முத்தும் பவளமும் நிறைந்துள்ளன.

1. கடலில் முத்தும் பவளமும் நிறைந்துள்ளன.
2. கடலில் முத்தும் நிறைந்துள்ளன.
3. கடலில் நிறைந்துள்ளன.

## 26.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 129)

1. மருத்துவத்துறையில் தற்போது மாற்றம் ரோபோடிக் அறுவை சிகிச்சை ஆகும்.
2. ரோபோக்கள்.
3. மருத்துவரின் கைகளுக்கு எட்டாத மிகச்சிறிய உடல் உறுப்பும் ரோபோவின் கைகளுக்கு எட்டும் அளவுக்கு அதன் மணிக்கட்டு வடிவம் அமைந்துள்ளது. எனவே, அச்சிறு உறுப்புகளுக்குத் தேவையான சிகிச்சைகளையும் ரோபோவால் துல்லியமாக வழங்கமுடியும்.
4. ரோபோக்களைப் பயன்படுத்தி இரைப்பை, கல்லீரல், கணையம், குடல்நோய்கள் உள்ளிட்ட பல்வேறு வயிற்று நோய்களைக் குணப்படுத்தலாம்.
5. மருத்துவர்கள்.

## 26.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 130)

| | | |
|---|---|---|
| 1. **நிறுவனம்** | – | நல்ல ஊழியர்களால் சிறந்த **நிறுவனம்** உருவாகிறது. |
| 2. **சிகிச்சை** | – | அறுவைச் **சிகிச்சை**யில் ரோபோக்கள் பயன் படுத்தப்படுகின்றன. |
| 3. **வளர்ச்சி** | – | ஒரு நாட்டின் **வளர்ச்சி** அந்த மக்களின் நலனில் இருக்கிறது. |

## 26.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 131)

கெர்டி தெரசா கோரி ஒரு ஆஸ்திரிய–ஹங்கேரிய–அமெரிக்க உயிர்வேதியியலாளர் ஆவார், அவர் 1947 ஆம் ஆண்டில் அறிவியலில் நோபல் பரிசு வென்ற மூன்றாவது பெண்மணி ஆவார், மேலும் "கிளைகோஜனின் வினையூக்கி மாற்றத்தின் போக்கைக் கண்டுபிடிப்பதில்" அவரது குறிப்பிடத்தக்க பங்கிற்காக உடலியல் அல்லது மருத்துவத்தில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி ஆவார்.

## 26.11 உயர்நிலைத் திறன்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கதைக்கு எந்தத் தலைப்புப் பொருந்தும்? கதையைப் படித்துத் தேர்ந்தெடுத்துக் கூறுக.**

உழைப்பே உயர்வு

# பாடம் – 27

## 27.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம். (பக்கம் எண்: 135)

1. ஆபிரகாம் பண்டிதர் இசைத்துறையில் மட்டுமல்லாமல் சித்த மருத்துவம், சோதிடம், வேளாண்மை, சமயம், மொழி எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

2. ஆபிரகாம் பண்டிதர் சிறு வயதிலிருந்து இசையின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். பல பாடல்களைத் தாமே இயற்றிப்பாடும் திறமை பெற்றிருந்தார். எனினும் இசையை முறையாகப் பயில விரும்பி இசை வல்லுநரிடம் சரளி வரிசை, அலங்காரம், கீதம், கீர்த்தனைகள், வர்ணங்கள் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.

3. கருணாமிர்த சாகரம் – முதல் புத்தகம் நான்கு பாகங்கள் ; கருணாமிர்த சாகரம் – இரண்டாம் புத்தகம் நான்கு பாகங்கள் என இசைத்தமிழ் ஆராய்ச்சி குறித்து இரண்டு புத்தகங்களை ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்டார்.

4. ஆபிரகாம் பண்டிதர் நடத்திய இசைத்தமிழ் மாநாட்டில் இசை ஆய்வாளர்கள், இசைக் கலைஞர்கள், மொழியியல் அறிஞர்கள் ஆகியோர் பங்கேற்றனர். அவர்களின் மூலம் இசை தொடர்பான சுரங்கள், சுருதிகள், பண்கள் பற்றித் தமக்கு எழுந்த ஐயங்களைக் கேட்டு தெளிந்தார்.

5. ஆபிரகாம் பண்டிதர் ஈடு இணையற்ற அறிவாற்றலையும் ஆன்றோர் போற்றும் நற்பண்புகளையும் பெற்றிருந்தார். அவர் ஒழுக்கத்துடனும் சுற்றத்தாரை மதிக்கும் மாண்புடனும் வாழ்ந்தார். தமிழிசைச் செல்வர்களையும் புலவர் பெருமக்களையும் அவர் ஆதரித்தார்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 136)

1. இ) இயல், இசை, நாடகம்
2. இ) ஆசிரியர்
3. ஆ) கருணாமிர்த சாகரம்
4. இ) 1917
5. அ) வல்லுநர்

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 136)**

1. இசைத்தமிழ்
2. இசைத்தமிழ் ஆராய்ச்சி நூல்
3. இசை மாநாடு
4. அனந்த நாராயணர்
5. புகைப்படம்

**ஈ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 136)**

1. தமிழ் + இசை = தமிழிசை
2. மருத்துவம் + துறை= மருத்துவத்துறை
3. நன்மை + பண்பு = நற்பண்பு
4. இசை + பயிற்சி = இசைப்பயிற்சி
5. வழி + தோன்றல் = வழித்தோன்றல்

**உ) பிரித்து எழுதுக, (பக்கம் எண்: 136)**

1. முத்தமிழ் = மூன்று + தமிழ்
2. அச்சுக்கூடம் = அச்சு + கூடம்
3. பூச்செடிகள் = பூ + செடிகள்
4. மதிப்புரை = மதிப்பு + உரை
5. அறிவாற்றல் = அறிவு +ஆற்றல்

## 27.3 மொழிக்கூறு

**பயிற்சிகள்**

**அ) பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சியில் அமைந்த சொற்களை எடுத்து எழுதுக (பக்கம் எண்: 139)**

1. அலைகடல்
2. மண்மேடு
3. தென்னைமரம்
4. முள்வேலி
5. தாய்மொழி
6. பகல்நிலவு

ஆ) கீழ்க்காணும் சொற்களை இணைத்து எழுதி, எவ்வகை புணர்ச்சி என எழுதுக. (பக்கம் எண்: 139)

| வ. எண் | நிலைமொழி, வருமொழி | புணர்ச்சி வகை |
|---|---|---|
| 1. | வாழை + மரம் = வாழைமரம் | இயல்பு புணர்ச்சி |
| 2. | சொல் + பொருள் = சொற்பொருள் | விகாரப்புணர்ச்சி (திரிதல் விகாரம்) |
| 3. | கல் + தாழை = கற்றாழை | விகாரப்புணர்ச்சி (திரிதல் விகாரம்) |
| 4. | வட்டம் + வடிவம் = வட்டவடிவம் | விகாரப்புணர்ச்சி (கெடுதல் விகாரம்) |
| 5. | திரு + குறள் = திருக்குறள் | விகாரப்புணர்ச்சி (தோன்றல் விகாரம்) |

இ) பொருத்துக (பக்கம் எண்: 139)

1. இயல்பு புணர்ச்சி – வான்மேகம்
2. தோன்றல் விகாரம் – பூஞ்சோலை
3. திரிதல் விகாரம் – பற்பசை
4. கெடுதல் விகாரம் – மரவேர்

## 27.4 மொழியோடு விளையாடுவோம்.

ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டாம் எழுத்துகளை ஒன்று சேர்த்தால் கிடைக்கும் சொற்களைக் கண்டறிக. (பக்கம் எண்: 140)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | கபடி | காந்தி | மூதுரை | | | பந்து |
| 2. | பகடை | மணி | இனிப்பு | | | கணினி |
| 3. | பூமாலை | கம்பளி | விபத்து | அழகு | அம்மா | மாம்பழம் |
| 4. | புவி | வளை | தாயார் | சட்டை | ஆடு | விளையாட்டு |
| 5. | கதவு | படம் | மகன் | நீளம் | கம்பு | தடகளம் |
| 6. | அபாயம் | தொட்டில் | நாடு | | | பாட்டு |
| 7. | பசு | கீற்று | ஆறு | நிலா | | சுற்றுலா |
| 8. | ஆபத்து | உதவி | மக்கள் | அகல் | கம்பம் | பதக்கம் |
| 9. | மதி | அறம் | கன்னி | குபேரன் | ஊசி | திறன்பேசி |
| 10. | கவிதை | துடுப்பு | காகம் | புதையல் | | விடுகதை |

## 27.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 141)

1. மகன் தந்தையைப் பணி செய்ய விடாமல் அடிக்கடி இடையூறு செய்து கொண்டிருந்தான்.

2. மகனைத் திசை திருப்ப தந்தை, ஒரு வரைபடத்தாளைப் பல மடிப்புகளாகக் கிழித்து அதை ஒன்றாகச் சேர்த்து கொண்டு வருமாறு கூறினார்.

3. மகன் உலகப்படத்துக்குப் பின்னாலிருந்த மனிதனின் படத்தை வைத்துப் பொருத்தினான்.

4. தந்தை, மகனிடம் மனிதனை வைத்து உலகத்தைப் பொருத்தி விட்டாய். மனிதன் உலகத்தைச் சரியாகப் பொருத்திக் கொண்டால் அது தான் "மனித நேயம்" என்று அறிவுரை கூறினார்.

5. தந்தை தான் கொடுத்த வேலையை மகன் முடிக்க முடியாது. எனவே தன்னைத் தொல்லை செய்ய மாட்டான் என்று நம்பினார். ஆனால் அவர் மகன் ஐந்து மணித்துளிக்குள் வேலையை முடித்ததால் தந்தையின் நம்பிக்கை வீண் போனது.

## 27.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 29)

| | | |
|---|---|---|
| **மன உறுதி** | – | மனிதன் துன்பம் வரும் காலத்தில் **மன உறுதி**யினை இழக்கக்கூடாது. |
| **புகழ்** | – | **புகழ்** பெற்ற ஒருவன் இறந்தாலும் அவன் புகழ் அழியாது. |
| **ஆற்றல்** | – | நம்மால் ஒரு செயலை முடிக்க முடியும் என்பதே நம்மிடம் உள்ள மிகப்பெரிய **ஆற்றல்** சக்தியாகும். |

## 27.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 143)

Leonardo da Vinci was a genius who excelled in many fields. He was originally from Italy. He was renowned in many fields, including as a painter, sculptor, musician, mathematician, and astronomer. He painted a beautiful woman named Mona Lisa, whose smile is still famous today.

## 27.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### குறுக்கெழுத்துப் போட்டி புதிர்க்கட்டம் உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1 ம | தி | | 2 சி |
| | | 3 க | லை |
| 4. கு | யி | ல் | |
| கை | | | 5கை |

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. சூரியன் உதித்தவுடன் மறைவது எது | 2. சிற்பி வடிப்பது |
| 3. நம்மிடம் இருக்கும் ஒரு திறன் | 3. அரிசியில் இருப்பது, நாம் உண்ண முடியாதது. |
| 4, பாடும் பறவை | 4. மலைக்குள் இருப்பது. |
| 5.ஒரெழுத்து உறுப்பு | |

## 27.11 படைப்பாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் அழைப்பிதழைப் பற்றி இருவர் பேசுவது போல் உரையாடல் உருவாக்குக.

குமரன் : அப்பா இந்த விழாவின் நோக்கம் என்ன?

அப்பா : அறிஞர்களுக்கு விருது வழங்குதலும் இலக்கியக் கூட்டமும் நடத்துவதே இவ்விழாவின் நோக்கம்.

குமரன் : எங்கு எப்பொழுது நடைபெற போகிறது அப்பா?

அப்பா : ஆர்.எஸ்.புரம் கோவையில் 18 நவம்பர் 2023 சனிக்கிழமை அன்று நடைபெற போகிறது.

குமரன் : பாரதி ஒரு பெரும் கவிஞரா அப்பா?

அப்பா : ஆமாம் குமரா. பாரதி ஒரு மகாக்கவி. அவரது சாதனையையும் சரித்திரத்தினையும் இவ்விழாவில் அறிந்து கொள்ளலாம்.

குமரன் : அப்பா என்னை இவ்விழாவிற்குக் கட்டாயம் அழைத்து செல்ல வேண்டும். செய்வீர்களா?

அப்பா : கட்டாயம் நாம் அனைவரும் செல்வோம்.

# பாடம் – 28

## 28.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 148)

1. தாமஸ் ஆல்வா எடிசன் அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தில் மிலன் என்னும் ஊரில் 1847ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 17ஆம் நாள் பிறந்தார்.

2. எடிசன், இளம் வயதில் ஸ்கார்லெட் என்னும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். அதனால் அவருக்குச் செவிப்புலன் குறைபாடு ஏற்பட்டது. இதனால் நான்கு வயது வரை இயல்பாகப் பேச இயலவில்லை.

3. "எதற்கும் அச்சப்படாதே, தொடர்ந்து முயற்சி செய், தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள், கற்றுக் கொள்வதை நிறுத்திக் கொள்ளாதே, தொடர்ந்து உன்னை மேம்படுத்திக் கொள்" என எடிசனுக்கு அவர் தாயார் ஊக்கமளிக்கக் கூடிய வகையில் அறிவுரைகளைக் கூறினார்.

4. எடிசன், முட்டைகளின் மேல் தாய்க்கோழி அமர்ந்து இருந்தது. சிலநாள் கழித்து அந்த முட்டைகளிலிருந்து கோழிக்குஞ்சுகள் வெளிவந்தன. இதனைக் கண்ட எடிசனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதைத்தீர்க்க தானும் அது போல் முயன்றார். இது போல, தான் பார்க்கும் ஒவ்வொரு நிகழ்வைக் குறித்தும் சிந்தித்து ஆராயத் தொடங்கினார்.

5. தாமஸ் ஆல்வா எடிசன்

6. எடிசன் உடல் அடக்கத்தின் போது, அமெரிக்க ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவரின் ஆணைக்கிணங்க அமெரிக்கா முழுவதும் மின்விளக்குகள் ஒரு மணித்துளி அணைக்கப்பட்டது.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 148)

1. இ) எடிசன்
2. இ) ஸ்கார்லட்
3. ஆ) பிப்ரவரி 17
4. இ) வாக்குப்பதிவு இயந்திரம்
5. அ) அமெரிக்கா

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 148)**

1. 1869
2. 1328
3. ஓஹியோ
4. ஹெர்பர்ட் ஹூவர்
5. 18–20

**ஈ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 148)**

1. அறிவு + கூர்மை = அறிவுக்கூர்மை
2. வாக்கு + பதிவு = வாக்குப்பதிவு
3. கண்டு + அறிந்தார் = கண்டறிந்தார்
4. காப்பு + உரிமை = காப்புரிமை

## 28.3 மொழிக்கூறு

**பயிற்சிகள்**

**அ) பின்வரும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை எனத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 150)**

1. இ) உணர்ச்சி
2. இ) கட்டளை
3. ஆ) செய்தி
4. ஆ) வினா

**ஆ) கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சேர்ந்தவை என எழுதுக. (பக்கம் எண்: 150)**

1. உணர்ச்சித் தொடர்
2. வினாத் தொடர்
3. செய்தித் தொடர்
4. கட்டளைத் தொடர்
5. வினாத் தொடர்

இ) பொருத்துக. (பக்கம் எண்: 150)

| | | |
|---|---|---|
| 1. அறம் செய விரும்பு | – | கட்டளைத் தொடர் |
| 2. உன் பெயர் என்ன? | – | வினாத்தொடர் |
| 3. ஆஹா! தேனின் சுவை இனிமை! | – | உணர்ச்சித் தொடர் |
| 4. நாளை அமைச்சர் வருகிறார். | – | செய்தித் தொடர் |

## 28.4 மொழியோடு விளையாடுவோம்.

இரு தொடருக்கும் ஒரே சொல் விடையாக வரும். அச்சொல்லைக் கண்டறிக (பக்கம் எண்: 151)

1. கொட்டுவதால்
2. அச்சினால்
3. நூல்
4. ஆறு
5. வளை

## 28.5 கேட்டல் கருத்தறிதல்

வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 154)

1. இளமாறனின் கடைக்கு வந்த பெரியவர் முலாம்பழத்தை வாங்க விரும்பினார்.

2. இளமாறன் முலாம்பழத்தில் ஒரு பக்கம் அழுகியுள்ளது என்று உண்மையைக் கூறினான்.

3. வளவன் அழுகிய தேங்காயை நல்ல தேங்காய் என்று பொய் சொல்லி விற்பனை செய்தான்.

4. பெரியவர், இளமாறனின் நேர்மையைக் கண்டு தன்னுடைய கடையில் வேலைக்குச் சேருமாறு கூறினார். அவனும் வேலைக்குச் சேர்ந்தான்.

5. நம்மை நம்பி வாங்குபவருக்கு நாம் தீங்கு நினைக்கக்கூடாது. எனவே பொருளை விற்பதிலும் ஓர் அறம் வேண்டும்.

## 28.7 செந்தமிழ்ச் செல்வம்

**சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 153)**

1. **கண்டுபிடிப்பு**

   நம் வாழ்க்கை முறை பல்வேறு **கண்டுபிடிப்பு**களால் மாறியுள்ளன.

2. **கல்வியறிவு**

   **கல்வியறிவு** என்பது நமக்குஒரு கண் போன்றது.

3. **ஆராய்ச்சி**

   புதுப்புது **ஆராய்ச்சி**களால் தான் பலப்பல கண்டுபிடிப்புகள் தோன்றியுள்ளன.

## 28.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 154)

When all the abilities found in a person are revealed, personality develops. This will indicate the overall development level of his various abilities. Personality traits make a person complete.

# பாடம் – 29

## 29.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 161)

1. தீவதிலகை, அட்சயப் பாத்திரத்தைக் கொண்டு நீ வறுமை உற்றவர்களின் பசியைப் போக்க வேண்டும்; பசித்துயரத்தின் கொடுமையை நீக்க வேண்டும் என்று மணிமேகலையிடம் கூறினாள்.

2. மணிமேகலைக்கு அட்சயப் பாத்திரம் புத்த பீடிகையின் முன்னாள் உள்ள கோமுகி என்னும் குளத்தில் கிடைத்தது.

3. அட்சயப் பாத்திரத்தில் உள்ள உணவு அள்ள அள்ள குறையாமல் வந்து கொண்டே இருக்கும்.

4. அட்சயப் பாத்திரத்தைக் கொண்டு மணிமேகலை எல்லாருக்கும் உணவு அளித்தாள்.

5. மணிமேகலை அட்சயப் பாத்திரத்தின் உதவியால் ஏழை, எளியவருக்கு உணவளித்து அவர்களின் பசிப்பிணியை நீக்குகிறாள். இதனால் மணிமேகலை "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என மணிமேகலைக் காப்பியத்தில் சிறப்பிக்கப்படுகிறாள்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 161)

1. அ) ஆதிரை
2. ஈ) அமுதசுரபி
3. ஆ) மணிமேகலா தெய்வம்
4. ஆ) தீவதிலகை
5. ஆ) வைகாசி

### இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 161)

1. உணவு
2. மணிமேகலை
3. அட்சயப்பாத்திரம்
4. பசிப்பிணி
5. முழுமதி

### ஈ) சேர்த்து எழுதுக (பக்கம் எண்: 161)

1. உணவு + அளித்தாள் = உணவளித்தாள்
2. பசி + பிணி = பசிப்பிணி
3. வறுமை + உற்றவர் = வறுமையுற்றவர்
4. சிறை + சாலை = சிறைச்சாலை

## 29.3 மொழிக்கூறு

### பயிற்சிகள்

### அ) கீழ்க்காணும் நேர்க்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றாக மாற்றுக. (பக்கம் எண்: 164)

1. பாரதிதாசன் நமது தமிழ் மொழி இனிமையானது என்று பாடியுள்ளார்.
2. முல்லை கயலிடம் அவள் விடியற்காலையில் எழுந்து உடற்பயிற்சி மேற்கொண்டதாகக் கூறினாள்.
3. மதிவாணன் இளமாறனிடம் மறுநாள் அவன் வீட்டிற்கு சென்றால் தோட்டத்தைச் சுற்றிக்காட்டுவதாகக் கூறினான்.
4. பேரறிஞர் அண்ணா திருக்குறள் கருத்துகளை உலகம் முழுவதும் பரப்புமாறு கூறினார்.
5. என்னிடம் என் அண்ணன் நான் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்றதாகக் கூறினார்.

### ஆ) கீழ்க்காணும் அயற்கூற்றுத் தொடர்களை நேர்க்கூற்றாக மாற்றுக. (பக்கம் எண்: 164)

1. " நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று அன்புக்கரசி என்னிடம் கூறினாள்.
2. "நீ வரைந்த ஓவியம் அழகாக இருக்கிறது" என்று அசிரியர் கூறினார்.
3. "நீங்கள் காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்" என்று மருத்துவர் பாண்டியனிடம் கூறினார்.
4. "நீ நாளை கண்காட்சிக்கு வந்தால் புத்தகம் தருகிறேன்" என்று நண்பன் என்னிடம் கூறினான்.
5. "நானும் அமெரிக்கா வருகிறேன்" என்று யாழினி அண்ணனிடம் கூறினாள்.

### இ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 164)

1. ஒருவர் நேரே கூறுவது போல் இருப்பது நேர்கூற்று எனப்படும். எ.கா: "முகிலா, நான் நாளை ஊருக்குச் செல்கிறேன்" என்று கண்ணன் கூறினான்.

2. ஒருவர் நேரே கூறியதைப் படர்க்கையில் மாற்றிக் கூறுவது அயற்கூற்று எனப்படும். எ.கா: தான் அடுத்தநாள் ஊருக்குச் செல்வதாக கண்ணன் முகிலனுக்குக் கூறினான்.

3. நாளை – மறுநாள்
   இப்பொழுது – அப்பொழுது
   இதனால் – அதனால்
   நான் – தான்
   நீ – அவன், அவள்

4. அன்று – இன்று
   மறுநாள் – நாளை
   அது – இது
   அவை – இவை
   அவர்கள் – நீங்கள்

5. நேர்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போது கவனிக்க வேண்டியவை:
   நேர்க்கூற்றிலுள்ள மேற்கொள்குறி, காற்புள்ளி, என்று, என என்ற செய்தியை முடிக்கும் சொற்கள் ஆகியவற்றை நீக்குக.

   முன்னிலையில் உள்ளதைத் தன்மையாகவோ, படர்க்கையாகவோ மாற்றுக. கட்டளைச் சொல்லோடு 'மாறு', 'ஆக' என்ற சொற்களைச் சேர்த்து விடுக. (எ.கா: படிக்குமாறு, எழுதுவதாக)

## 29.4 மொழியோடு விளையாடுவோம்.

### கீழ்க்காணும் படங்களிலிருந்து பழமொழிகளைக் கண்டறிக (பக்கம் எண்: 165)

1. அணைய போகிற விளக்கு தான் பிரகாசமாக எரியும்.
2. கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு.
3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
4. நிறைகுடம் தளும்பாது குறை கூடம் கூத்தாடும்.
5. தனி மரம் தோப்பாகாது.

## கருத்து விளக்கப்படம்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 166)

1. திருக்குறள் தெளிவுரை பதவுரைப் பதிப்பு
2. திரு. வீ. முனுசாமி
3. குறட்பாக்களை அனைவரும் புரிந்து கொள்ளும் அளவிற்குப் எளிய உரையாக, தெளிவுரையும் கருத்துரையும் உள்ளது இந்நூலின் சிறப்பாகும்.
4. வானதி பதிப்பகம்
5. சிறப்புப் பெயர்: திருக்குறளார், தமிழ்மறைக்காவலர், விருது: கலைமாமணி

## 29.5 கேட்டல் கருத்தறிதல்

### வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 167)

1. ஆசைத்தம்பி, கன்னியப்பன்
2. கன்னியப்பன் ஆசைத்தம்பியிடம், நீங்கள் இருக்கும் இடத்தில் ஜன்னலாவது இருக்கிறது. இந்தப்பக்கம் அதுகூட இல்லை என்று வருத்தத்துடன் கூறினார்.
3. ஆசைத்தம்பி, கன்னியப்பனிடம் கவலைப்படாதீர்கள் இந்த ஜன்னலில் என்ன பார்க்கிறேனோ அதை அப்படியே உங்களுக்குக் கூறுகிறேன்; இதனால் உங்கள் மனவருத்தம் கொஞ்சம் குறையும் என்று கூறினார்.
4. கன்னியப்பன் ஜன்னலுக்கு அருகே சென்று கண்ட காட்சி இயற்கைக் காட்சி ஏதுமில்லாத நீண்ட மதில் சுவர் தான் இருந்தது.
5. ஆசைத்தம்பி உதவும் உள்ளம் படைத்தவர். பார்வையிழந்த போதும் ஜன்னலோர காணாத காட்சியைப் புனைவுடன் அழகாக வர்ணித்துக் கூறி படுக்கையில் இருந்த கன்னியப்பனுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

## 29.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 169)

1. **பசிப்பிணி**
   உலகில் கொடிய நோய் **பசிப்பிணி**யாகும்.

2. **அமுதசுரபி**
   அள்ள அள்ள குறையாத உணவு வரக்கூடிய பாத்திரம் **அமுதசுரபி**

3. **அறம்**
   பிறருக்கு நேரும் துன்பத்தில் கைமாறு கருதாமல் உதவுவது **அறம்** ஆகும்.

## 29.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 170)

தமிழ் இலக்கியத்தின் ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை ஒன்றாகும். இதை எழுதியவர் கூல வாணிகன் சீத்தலை சாத்தனார் ஆவார். இது கோவலன் மற்றும் மாதவியின் மகள் மணிமேகலையின் வாழ்க்கையை சித்தரிக்கிறது.

# பாடம் – 30

## 30.2 படிப்போம்

### பயிற்சிகள்

### அ) விடை காண்போம் (பக்கம் எண்: 173)

1. ஜான் ஹென்றி டுனாண்ட்சு விட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனிவா நகரில் 1828 ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் பிறந்தார்.

2. ஜான் ஹென்றி டுனாண்ட்

3. உலகம் முழுவதும் மே மாதம் எட்டாம் நாளன்று 'செஞ்சிலுவை நாள்' கொண்டாடப்படுகிறது.

4. பிரான்ஸ் ஆஸ்திரியா ஆகிய இரு நாட்டிற்கும் இடையே நடந்த போரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினாலும் போரினாலும் எண்ணற்ற வீரர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இதைக் கண்ட ஜான் ஹென்றி டுனாண்ட் பெரிதும் மனங்கலங்கினார். அவர்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்று முடிவு செய்தார். அந்தத் துயரமான நிகழ்வு தான் பின்னாளில் உலக அளவிலான செஞ்சிலுவைச் சங்கம் தோன்றக் காரணமாக அமைந்தது.

5. போரில் காயமுற்ற வீரர்களுக்கு உதவுதல்; போர் சமயத்தில் மட்டுமின்றி எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உதவி தேவைப்பட்டால் உதவுவதற்குத் தயாராக இருத்தல் போன்றன செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் ஆகும்.

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 173)

1. ஆ) சுவிட்சர்லாந்து
2. ஆ) சால்ஃபரினோ
3. ஆ) சால்ஃபரினோவின் நினைவுகள்
4. அ) செஞ்சிலுவை
5. ஆ) 1901

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண் : 174)**

1. மே 8
2. ஜெனிவா
3. போர் குண்டு வெடிப்பு
4. போர் நிகழ்வுகள்
5. 191

**ஈ) சேர்த்து எழுதுக. (பக்கம் எண்: 174)**

| | | |
|---|---|---|
| 1. அருமை + செயல்கள் | = | அருஞ்செயல்கள் |
| 2. செம்மை + சிலுவை | = | செஞ்சிலுவை |
| 3. போர் + களம் | = | போர்க்களம் |
| 4. மருத்துவம் + உதவி | = | மருத்துவ உதவி |
| 5. மனம் + உறுதி | = | மனஉறுதி |

**உ) பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 174)**

| | | |
|---|---|---|
| 1. பின்னாள் | = | பின் + நாள் |
| 2. உயிரிழந்தனர் | = | உயிர் + இழந்தனர் |
| 3. மனம்கலங்கினார் | = | மனம் + கலங்கினார் |
| 4. வாணிகத்தொழில் | = | வாணிகம் + தொழில் |
| 5. நல்லுள்ளம் | = | நல் + உள்ளம் |

## 30.3 மொழிக்கூறு

**பயிற்சிகள்**

**அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. (பக்கம் எண்: 176)**

1. விளையாட்டுத்திடலில்
2. கால்பந்து
3. கனமழை
4. வளங்களுடன்
5. கற்கின்றனர்

**ஆ) இடம் மாறியுள்ள சொற்களை வரிசைப்படுத்துக. (பக்கம் எண்: 176)**

1. நானும் என் நண்பர்களும் கால்பந்துப் போட்டியில் கலந்துக் கொண்டோம்.
2. எனக்கு தொலைக்காட்சியில் செய்தி வாசிக்க விருப்பமாக உள்ளது.
3. வாழ்வில் எப்போதும் நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
4. நேற்று மனித நேயம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடை பெற்றது.
5. உலகில் வேலை வாய்ப்பிற்கான சான்றிதழ் படிப்புகள் ஏராளமாக உள்ளன.

**ஈ) ஆறு சொல் கொண்ட தொடர்கள் நான்கு எழுதுக (பக்கம் எண்: 176)**

1. போரில் காயம்பட்ட வீரர்கள் சிலர் உறுப்புகளை இழந்தனர்.
2. அட்சயப் பாத்திரத்தில் முதன்முதலில் ஆதிரை என்பவள் உணவிட்டாள்.
3. பள்ளியில் நடந்த விளையாட்டுப்போட்டியில் கண்ணன் வெற்றிப் பெற்றான்.
4. தமிழர்கள் கடல் போக்குவரத்திற்காகப் பல்வேறு கலன்களை உருவாக்கினர்.

## 30.4 மொழியோடு விளையாடுவோம்.

**வட்டத்தின் நடுவே ஆறு சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லின் முடிவு எழுத்து, இன்னொரு சொல்லின் தொடக்க எழுத்தாக இருக்கும். (பக்கம் எண்: 177)**

காது, துடிப்பு, புரட்சி, சிரஞ்சீவி, விளக்கு, குடும்பம்

## 30.5 கேட்டல் கருத்தறிதல்

**வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 178)**

1. உணவகம் வாட்டிகன் நகரில் அமைந்திருந்தது.

2. உணவகத்தில் உணவு உண்ண வந்த பெண், உணவு கேட்டு நின்றவருக்கும் சேர்த்து உணவளிக்குமாறும் அதற்கான தொகையையும் தாம் அளிப்பதாகவும் கூறினார்.

3. பவுல் சில ஆண்டுக்கு முன்பு என் உணவகத்தில் பணிபுரிந்தார். அப்போது பசியோடு வந்த ஒரு பெண்ணிடம் பணம் பெற்றுக் கொள்ளாமல் உணவளித்தார். அதனால் அவருக்கு உணவக உரிமையாளர் உணவளிக்க மறுத்தார்.

4. கத்ரீன் லில்லி, அன்று உணவு பெற்றுக் கொண்டு பணம் கொடுக்காமல் சென்ற அந்தப் பெண் நான் தான். பவுல் எனக்குத் தான் உணவு அளித்தார். அவரைப் போன்றவர்கள் உதவியதால் தான், நான் இன்று உயிரோடு இருக்கிறேன் என்றார்.

5. கத்ரீன் லில்லியின் டி.எம்.கேபிடல் நிறுவனம் உணவுப் பொருள்களை விற்பனை செய்வதோடு, மக்கள் நலனுக்காகவும் இயங்குகிறது.

## 30.7 செந்தமிழ்ச் செல்வம்

### சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (பக்கம் எண்: 179)

1. **செஞ்சிலுவைச் சங்கம்**
   போரில் காயப்பட்ட வீரர்களுக்கு உதவும் அமைப்பாக **செஞ்சிலுவை சங்கம்** தொடங்கப்பட்டது.

2. **அன்பு**
   எல்லோரிடமும் **அன்பு** செலுத்தவேண்டும்.

3. **உதவி**
   கேட்காமல் கிடைக்கும் **உதவி**க்குக் கடல் கூட உவமையாகாது.

## 30.9 மொழி பெயர்ப்போம் (பக்கம் எண்: 180)

First aid is the immediate help that can be given to someone who has suddenly become ill or has had an accident. It should be given by people who are well-trained. Such first aid should be given before taking the sick person to a hospital.

## 30.10 படைப்பாற்றல் வளர்ப்போம்

### கீழ்க்காணும் பாடலில் விடுபட்ட சொற்களைக் கண்டறிந்து, பொருத்தி எழுதுக. (பக்க எண்: 180)

சிறுவர்களே ஒன்று சேருங்கள்
சிந்தனை செய்வோம் வாருங்கள்
நாட்டைப் போற்றும் வழியறிவோம்
நாளும் மனத்தில் நிலை நிறுத்திடுவோம்
நற்பண்பை என்றும் வளர்த்திடுவோம்
நமது கடமையாய்க் கொண்டிடுவோம்
பயன் கருதாது உதவிடுவோம்
பலரும் புகழ வாழ்ந்திடுவோம்

# மீள்பார்வை

## 1. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பொருந்தும் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக (பக்கம் எண்: 182)

1. சாந்தா அம்மையார்
2. தாமஸ் ஆல்வா எடிசன்
3. கோமுகி
4. ஆபிரகாம் பண்டிதர்
5. ஔவையார்

## 2. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை எழுதுக. (பக்கம் எண்: 182)

1. சிலப்பதிகாரம், மணிமேகலை
2. போர் சமயத்தில் மட்டுமின்றி எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உதவி தேவைப்பட்டால் உதவுவதற்குத் தயாராக இருக்கும் அமைப்பைச் செஞ்சிலுவைச் சங்கம் என்பர்.
3. உடல் இல்லாவிட்டால் உயிரால் இயங்க முடியாது. எனவே இதன் சிறப்பை உணர்ந்தே, "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் கூறுகிறார்.
4. சென்னை அடையாறில் 1954ஆம் ஆண்டு புற்றுநோய் நிறுவனம் தொடங்கப்பட்டது.
5. ஆபிரகாம் பண்டிதர் ஒரு சிறந்த இசைக்கலைஞர். கருணாமிர்தசாகரம் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சிநூலை உலகிற்கு அளித்துள்ளார்.

## 3. பொருத்துக (பக்கம் எண்: 182)

| | | | |
|---|---|---|---|
| 1. | குதிரை வண்டி | – | இயல்புபுணர்ச்சி |
| 2. | பேனாவை எடுக்காதே | – | கட்டளைத்தொடர் |
| 3. | அக்குழல் | – | வலிமிகல் |
| 4. | பூஞ்சோலை | – | தோன்றல் விகாரம் |
| 5. | மரவேர் | – | கெடுதல் விகாரம் |

**4. பின்வரும் வினாக்கள்– விடைகள் சரியா? (✓) தவறா? (x) என்பதைக் குறியிட்டுக்காட்டுக. (பக்கம் எண்: 182)**

1. தவறு
2. சரி
3. சரி
4. தவறு
5. சரி

**5. பின் வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக. (பக்கம் எண்: 182)**

1. தொடர்கள் நான்கு வகைப்படும். அவை செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத் தொடர், உணர்ச்சித் தொடர்
2. ஜூன் ஹென்றி டுனாண்ட் 'விரோதியும் மனிதன் தான்' என்று அவர்களுக்கும் உதவினார். அந்தச் சூழலில் அவர் கூறிய சொற்கள் ஒவ்வொரு போர் வீரரின் உள்ளத்தையும் நெகிழச் செய்தது.
3. அட்சயப் பாத்திரத்தில் அள்ள அள்ள குறையாமல் உணவு வந்து கொண்டே இருக்கும். அதனைக் கொண்டு வறுமை உற்றவர்களின் பசித்துயரத்தை நீக்க முடியும்.
4. நினைத்த நேரத்தில் உணவை உண்ணக்கூடாது. நன்கு பசித்த பிறகே உணவை உண்ண வேண்டும். அளவோடு உண்பது நலம் தரும். மேலும் உணவினை நொறுக்கித் தின்ன வேண்டும். உணவு உண்ணும் முறைகளைச் சரியாகப் பின்பற்றினால் உடலுக்கு நோய் ஏற்படாது.
5. வானொலி உரைச்சித்திரம் என்பது, ஒரு நிகழ்வையோ செய்தியையோ உரைவடிவில் எழுதி, கேட்போர் விரும்பும் வண்ணம் குரல் ஏற்ற இறக்கத்துடன் வானொலியில் உரையாற்றுவது ஆகும்.

**6. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு ஆறுசொல் கொண்ட தொடர் உருவாக்குக. (பக்கம் எண்: 185)**

1. **புற்றுநோய்**
   மருத்துவர் முத்துலட்சுமி அம்மையாரால் **புற்றுநோய்** நிறுவனம் தொடங்கப்பட்டது.

2. **உடற்பயிற்சி**
   **உடற்பயிற்சி** செய்வதற்குக் காலை நேரமே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

3. **முத்தமிழ்**

**முத்தமிழ்** என்பது இயல், இசை, நாடகம் ஆகும்.

4. **மின்சார வாக்குப் பதிவு**

எடிசனின் முதல் கண்டுபிடிப்பு **மின்சாரவாக்குப் பதிவு** ஆகும்.

5. **இரட்டைக்காப்பியம்**

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் **இரட்டைக் காப்பிய**ங்களாகக் கருதப்படுகின்றன.

**7. கீழ்க்காணும் நேர்கூற்றுத் தொடர்களை அயற்கூற்றுத் தொடர்களாக மாற்றுக. (பக்கம் எண்: 183)**

1. அரசன் புலவரிடம் பரிசைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினான்.
2. மறுநாள் தான் மதுரை செல்வதாக நன்மாறன் கூறினான்.
3. செல்வி தோழியிடம் தான் புத்தகம் கொண்டு வருவதாகக் கூறினாள்.
4. மாணவர்களிடம் இசையாசிரியர் அவர்கள் நாள்தோறும் பாடிப்பழகுமாறு கூறினார்.
5. தாயார் மகனிடம் கீரை வாங்கி வருமாறு கூறினார்.

**8. பின் வரும் சொற்களைப் பிரித்து எழுதுக. (பக்கம் எண்: 183)**

| | | | |
|---|---|---|---|
| 1. | செஞ்சிலுவை | = | செம்மை + சிலுவை |
| 2. | பல்லாயிரம் | = | பல + ஆயிரம் |
| 3. | முற்பிறவி | = | முன் + பிறவி |
| 4. | இசைப்பயிற்சி | = | இசை + பயிற்சி |
| 5. | நிதியுதவி | = | நிதி + உதவி |
| 6. | முத்தமிழ் | = | மூன்று + தமிழ் |
| 7. | தீப்பந்தம் | = | தீ + பந்தம் |
| 8. | பசிப்பிணி | = | பசி + பிணி |
| 9. | அச்சுக்கூடம் | = | அச்சு + கூடம் |
| 10. | உடற்பயிற்சி | = | உடல் + பயிற்சி |

**9. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பக்கம் எண்: 183)**

1. அ) மே எட்டு
2. இ) உயிர்ச்சத்து சி
3. அ) தஞ்சாவூர்
4. ஈ) 1847
5. அ) மணிமேகலை

**10. பின் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. (பக்கம் எண்: 184)**

1. சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்வு மற்றும் கதை மாந்தர் மணிமேகலையிலும் தொடர்வதால், இரட்டைக்காப்பியம் என அழைக்கப்படுகிறது.

2. ஒருவர் நேரே கூறுவது போல் இருப்பது நேர்க்கூற்று ஆகும். எ.கா: "முகிலா, நான் நாளை ஊருக்குச் செல்கிறேன்" என்று கண்ணன் கூறினான்
   ஒருவர் நேரே கூறியதைப் படர்க்கையில் மாற்றிக்கூறுவது அயற்கூற்று ஆகும். எ.கா: தான் அடுத்த நாள் ஊருக்குச் செல்வதாக கண்ணன் முகிலனுக்குக் கூறினான்.

3. தொடர் நான்கு வகைப்படும். அவை:
   - செய்தியைத் தெரிவிப்பது செய்தித்தொடர். எ.கா: சிறப்பு விருந்தினர் விழாவில் பேருரை நிகழ்த்தினார்.
   - வினாப் பொருளை உணர்த்துவது வினாத்தொடர். எ.கா: இப்பொருள் யாருக்குரியது?
   - கட்டளைப் பொருளில் வருவது கட்டளைத் தொடர். எ.கா: பூக்களைப் பறிக்காதே.
   - உணர்ச்சியை வெளிப்படுத்துவது உணர்ச்சித் தொடர். எ.கா: நீலக்கடலின் அலை என்னே அழகு!

4. இரு சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது புணர்ச்சி எனப்படும். புணர்ச்சி இருவகைப்படும். அவை:

   இயல்புபுணர்ச்சி: நிலைமொழியின் கடைசி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் சேரும் போது எவ்விதமாற்றமும் இன்றிப் புணர்வது இயல்புபுணர்ச்சி எனப்படும்.

   எ.கா: குதிரை + வண்டி = குதிரைவண்டி

விகாரப் புணர்ச்சி: விகாரம் என்பதற்கு மாற்றம் எனப் பொருள்படும். இரு சொல் புணரும் போது விகாரம் தோன்றுவதால் (மாற்றம்) அது விகாரப்புணர்ச்சி எனப்படும்.

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் புணரும் போது, மூன்று மாற்றங்கள்ஏற்படும்.

- ஓர்எழுத்து புதிதாகத்தோன்றுவது தோன்றல் விகாரம்.
  எ.கா: பூ + சோலை = பூஞ்சோலை
- ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிவது திரிதல் விகாரம்.
  எ.கா: பல் + பசை = பற்பசை
- ஓர்எழுத்து கெடுவது கெடுதல் விகாரம்.
- எ.கா: மரம் + வேர் = மரவேர்

5. சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும் போது க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்கள் மிகுந்து வரும். இவ்வாறு வருவன வல்லினம் மிகும் இடங்களாகும். வல்லின மெய்களை மிகுத்து எழுதுவதற்கு விதிகள் உள்ளன. அவற்றுள்

விதி 1
அ, இ, எ என்னும் சுட்டெழுத்துகள் பின் வல்லினம் மிகும்.
எ.கா: அக்குழலை
விதி 2
அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத்திரிபுகள் பின் வல்லினம் மிகும்.
எ.கா: அந்தப்பக்கம்
விதி 3
இரண்டாம் வேற்றுமை விரியில் (ஐ) வல்லினம் மிகும்.
எ.கா: பாலைக்குடித்தான்

### 11. பழமொழிகளை முழுமையாக்குக. (பக்கம் எண்: 184)

1. சிறக்காது
2. மருந்தும்
3. திருந்தச்
4. விளையும்
5. கொடுத்தோரே

**12. பின்வரும் திருக்குறளில் விடுபட்ட சொல்லைக் கண்டறிந்து நிரப்புக. (பக்கம் எண்: 184)**

1. சென்று
2. கற்றது
3. செய்த
4. செயல்
5. வேண்டாமை

**13. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக. (பக்கம் எண்: 184)**

| | | | |
|---|---|---|---|
| 1. | Epic | – | காப்பியம் |
| 2. | Island | – | தீவு |
| 3. | Red Cross Society | – | செஞ்சிலுவைச்சங்கம் |
| 4. | Copyright | – | காப்புரிமை |
| 5. | Statue of Liberty | – | சுதந்திரதேவி சிலை |
| 6. | Astrology | – | சோதிடம் |
| 7. | Personality | – | ஆளுமை |
| 8. | Cancer | – | புற்றுநோய் |
| 9. | Recalling | – | நினைவூட்டுதல் |
| 10. | Immunity | – | நோய்எதிர்ப்பு சக்தி |

**14. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக வினாக்கள்– விடைகள் (பக்கம் எண்: 185)**

1. புத்தகத் திருவிழாவைப் பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், பெரம்பலூர் மக்கள் பண்பாட்டு மன்றம் ஆகிய துறைகள் இணைந்து நடத்துகின்றன.
2. புத்தகத் திருவிழா பெரம்பலூர் நகராட்சித் திடலில் பத்து நாள் நடைபெறுகிறது.
3. புத்தகத் திருவிழாவில் 100 அரங்குகள் உள்ளன.
4. அனைத்து புத்தகங்களுக்கும் 10% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.
5. புத்தகத் திருவிழாவில் 10,000 தலைப்புகளில் 10,00,000 புத்தகங்கள் இடம் பெறுகின்றன.

15. கீழ்க்காணும் தமிழ்ப்பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக. (பக்கம் எண்: 185)

1. Good health will help you live longer. Good nutrition, daily exercise, and adequate sleep are the foundations of a healthy life.

2. An invention refers to a newly created product, method, or technology that has never existed before in the world. Throughout human history, inventions have occurred with the aim of completing a task in a new way, simply, and quickly.

3. Manimekalai is one of the five great Tamil poems. This poem was composed by Seethalai Sathanar. Since the story of Silappadhikaram continues in Manimekalai, these are called double poems.

4. The Young Red Cross Society and the Youth Red Cross Society are very important parts of its parent organization, the Indian Red Cross Society. vThese aim to instill the 7 fundamental principles of the Red Cross: humanity, impartiality, neutrality, independence, voluntary service, solidarity, and universality.

5. Knowing psychology can improve your knowledge. Improving your knowledge will improve your life. Not only can we improve ourselves, but psychology can also be used to improve those around us.

✷✷✷✷✷